
உங்கள் வேதாகமத்தை தெரிந்து கொள்ளுங்கள்

# தொழுகை

# WORSHIP

## மேல்நிலை வேத பாடம்




ஜெர்ரி பேட்ஸ்

Jerry Bates

தொழுகை: முதல் பதிப்பு, செப்டம்பர் 2017
பிரசுர உரிமை @ J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி

வடிவமைப்பு மற்றும் திருத்தம்
**கிங்ஸ்லி ராஜா, ஆண்டனி ராஜா**

■

அச்சிட்டு வெளியிட்டவர்
**P.C. பிலேமோன் ராஜா**
இயக்குனர், J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி

■

பிரதிகள் கிடைக்குமிடம் :
**J.C. ஆத்தும ஆதாயப் பயிற்சிப் பள்ளி**
45 C / 1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016. தமிழ்நாடு, இந்தியா.
அலைப் பேசி : 92 44 20 44 20, 92 44 21 44 21
மின் அஞ்சல் (e-mail) : obey2jesus@gmail.com



# புத்தக ஆசிரியரைப் பற்றி...

## JERRY & PAULA BATES

சகோதரர் ஜெர்ரி மற்றும் சகோதரி பவுலா பேட்ஸ் ஆகிய இருவருமே அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள டென்னஸியை தாயகமாகக் கொண்டவர்கள். ஜெர்ரி (Jerry) அவர்கள் மிஸிஸிப்பியில் ஃபிரிடு ஹார்டெமன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்.

அவர் பிரசங்கிக்கத் தொடங்கிய பின், டென்னிஸியிலுள்ள மெம்பிஸ்ஸின் ஹார்டிங் பல்கலைக்கழகத்திலிருந்து மார்க்கத் தத்துவக்கலையில் முதுநிலைப் பட்டத்தையும் (M.A),
இறையியலில் முதுநிலைப் பட்டத்தை (M.Div.)
ப்ளாரன்ஸ் அலபாமாவில் உள்ள ஹெரிடேஜ் கிறிஸ்தவ பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றார்.

அவர் டென்னஸியிலும், ஆர்க்கென்ஸாசிலும் மிஸிஸிப்பியிலும் உள்ள உள்ளூர் சபைகளிலும் 25 வருடங்களாக ஊழியம் செய்தார்.

2007 ஆகஸ்ட் மாதத்தில், சகோதரர் ஜெர்ரியும் சகோதரி பவுலாவும் வினோனாவுக்கு வந்து உலக ஆத்தும ஆதாய (World Evangelism) குழுவுடன் இணைந்தனர். பவுலா அவர்கள், கணக்குகளை கையாள்வதிலும், வெளிநாடுகளில் சென்று ஊழியப்பணி செய்யவும் பயணங்களை மேற்கொள்கிறார். ஜெர்ரி அவர்கள், சர்வ தேச சத்தியத்தின் குரல் (TVOTI) எனும் புத்தக வெளியீட்டில் இணை ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

அவர் அந்தப் புத்தகங்களை அயல் நாடுகளுக்கு அனுப்பி வைப்பதிலும், ஊழியப் பணிக்கென பயணங்களை மேற்கொண்டும் வருகிறார். மேலும் இவர் கொலோராடோ மாநிலத்திலுள்ள டென்வர் எனும் இடத்தின் பேர்வேலி வேதாகமப் பயிலகத்தின் (Bear Valley Bible Inst.) ஒருங்கிணைப்பாளராகவும் ஆசிரியராகவும் பணியாற்றுகிறார்.

அவர் இந்தியாவில் இரண்டு முழு நேர ஊழியர் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றுவதோடு, தேவைக்கேற்ப பல பயிற்சிப் பள்ளிகளிலும் போதிக்கிறார். அவர் நமது J.C ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளிகளிலும் (J.C. School of Evangelism) கல்வித்துறைத் தலைவராக (Academic President) பணியாற்றுகிறார், இந்த J.C ஆத்தும ஆதாயப் பயிற்சிப்பள்ளி, கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களுக்கு செயலூக்கம் கொடுத்து, ஆத்தும ஆதாயப் களப்பணியில் சுறுசுறுப்பாய் இயங்க ஊக்கம் கொடுக்கிறது. தங்கள் பயணங்களில் செல்லும்போது பவுலா அவர்கள், மகளிர் வகுப்புகளிலும், கருத்தரங்குகளிலும், குழந்தைகள் வகுப்புகளிலும் போதிக்கிறார்.

இத்தம்பதியர், இந்தியாவிலும் உலகத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றி, பெந்தெகோஸ்தே நாளில் (Acts 2) பிரசங்கிக்கப்பட்ட சுவிசேத்தைப் பரப்பிக் கொண்டுள்ளனர்.

சகோ. ஜெர்ரி மிக எளிமையான முறையில் சத்தியத்தைப் போதிப்பவராக அறியப்பட்டவர். இவருடைய செய்தி கேட்பவர்களிடம் வல்லமையாக போய்ச் சேருகிறது. இந்தப் பாடங்கள், வாசகர்களுக்கு, எளிமையான முறையில் வேதாகமம் போதிக்கும் சத்தியத்தை அறிந்து பின்பற்ற உதவிகரமாயிருக்கும்படி ஜெபிக்கிறேன்.

ஆத்தும ஆதாய ஊழியத்தில்,
சகோ. **P.C. பிலேமோன் ராஜா,** M.Th.,
இயக்குனர், J.C. ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளி

# பொருளடக்கம்


1.தொழுகை என்றால் என்ன? 7

2.நாம் எங்கே தொழுது கொள்ள வேண்டும் ? 13

3.ஜெபம் 18

4.கர்த்தருடைய பந்தி 24

5.பாடுதல் 29

6.பரிசுத்தவான்களின் காணிக்கை (அல்லது) கொடுத்தல் 36

7. கேள்வி – பதில் பகுதி 41

# 1. தொழுகை என்றால் என்ன?

கிறிஸ்தவர்கள் ஈடுபட்டிருக்கும் முக்கியமான செயல்பாடுகளில் ஒன்று தொழுகை. இன்றைய நவீன கால தொழுகைகலே மனுஷர்களால் சேர்க்கப்பட்டுள்ள அநேக செயல்கள் வேத வசனத்தின் அங்கீகாரம் பெறாதவைகள். **கொலோசெயர் 3:17ல்** பவுல் எழுதுகிறதாவது, "வார்த்தையினாலாவது கிரியைகளினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்." இயேசுவின் நாமத்திலே ஏதோ ஒன்றைச் செய்வதென்பது அவருடைய அதிகாரத்தில் செய்வது என்று பொருள். வேதாகம அங்கீகாரமின்றி செய்யப்படும் தொழுகை "வீணானது", அல்லது இயேசு சொல்லுகிறபடி வெறுமையானது **(மத்தேயு 15:9).** இப்படியாக. வேதாகமம் கூறும் தொழுகையில் உட்பட்டவை யாவை என்பதையும், நமது தொழுகை தேவனுக்கு ஏற்புடையதாயிருக்கிறதா என்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## தொழுகை என்பது என்ன?

இந்தப் தொழுகை எனும் வார்த்தை புதிய ஏற்பாட்டில் குனிந்து வணங்குதல் என்று பொருள்படுகிறது, அல்லது பணிந்து நெடுஞ்சாண் கிடையாக வணங்குவது அல்லது ஆழமான கனத்தைச் செலுத்துவது என்று பொருள். அது வழிபடுதல், பயபக்தி, கனத்திற்குரிய பயம் ஆகியவற்றைக் குறிப்பிடத்தக்க வகையில் பேசும் வசனம் **யோவான் 4:23–24,** "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், இது இப்பொழுதே வந்திருக்கிறது; நம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார். இயேசு இங்கே உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் என்று

பேசுவதால், அது கள்ளத் தொழுகை செய்பவர்கள் இருப்பதையும் காட்டுகிறது. நாம் தொழுகை செய்யப்பட வேண்டியவர் பிதாவாகிய தேவன் இது தேவனோடு உள்ள நெருங்கின தொடர்பையும் அன்பையும் குறிப்பிடுகிறது **(எபேசி. 1:3: லூக் 11:2–4):** எப்படியிருப்பினும் நம்முடைய பயபக்தியுடன் கூடிய, கனத்திற்குரிய, பயத்திற்குப் பாத்திரமான தேவனுக்கு செலுத்த வேண்டிய கனத்தை ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. உண்மையான தொழுகையில் காணும் இரண்டு காரணிகள், ஆவியும் சத்தியமும் ஆவியினால் நிறையப் பெற்ற தொழுகை இருதயப் பூர்வமான உண்மைத் தொழுகை, மேலும் சத்தியத்தோடு தொழுகை கொள்வது அவருடைய சத்திய வசனத்திற்கு வழிகாட்டுகிறது. "உம்முடைய வசனமே சத்தியம்" என்று இயேசு சொன்னார். **(யோவான் 17:17):** இப்படியாக சத்தியத்தோடு தொழுது கொள்ளுவது என்பது தேவனுடைய வசனம் கற்பிக்கிறபடி தொழுது கொள்வதாகும்.

முதலில், தொழுகை தேவனை மகத்துவப்படுத்துவது. நமது தொழுகைக்குரியவர் தேவன் தாமேயன்றி, நமக்காக அல்ல ! ஒரு பிரசங்கியார் தொழுகையைக் குறித்து விளக்கமளிக்கும் போது, "தேவன் யார் என்று உணருவது, நீங்கள் யார் என்று உணருவது, அதற்கேற்றாற்போல் சரியான முறையில் கடமையாற்றுவது," என்றார். இது ஒரு எளிமையான விளக்கம். இதையே இந்தப் பாடத்திற்கு அடிப்படையாகக் கொண்டு தொழுகையைப் புரிந்து கொள்வோம். தொழுகையின் முதல் நோக்கம் **"தேவன் யார்"** என்று உணர்ந்து கொள்வது. தேவன் வானத்தையும், பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவர் **(ஆதியாகமம் 1:1: கொலோசெயர் 1:16)** அவர் மட்டும் தான் உண்மையான தேவன் **(யாத்திராகமம் 20:2–3).** அவர் முற்றிலும் பரிபூரணப்பட்டவரும் நீதியும் நியாயமும் நிறைந்தவர் **(மாற்கு 10:18).** ஏசாயா இந்த நோக்கத்தை வலியுறுத்தி தேவனை "இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்று சொன்னார். ஏசாயா இந்த "இஸ்ரவேலின் பரிசுத்தர்" எனும் பதத்தை, தேவனுக்குக் குறிப்பிட்டு 29முறை பயன்படுத்தியிருக்கிறார் (உதாரணமாக, **ஏசாயா**

1:4; 43:15). இது ஒரு முரணாய்த் தோன்றுகிற மெய்யுரையே. பரிசுத்தமுள்ளவர் நம் மத்தியில் இருக்கிறார். சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டு கெம்பீரி' இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்" என்றார் ஏசாயா. (ஏசாயா 12:6).

<u>இரண்டாவதாக, நாம் யார்? என்று கவனிக்க வேண்டும்.</u> **சங்கீதம் 14:1, மற்றும் 53:1–3ஐ** பவுல் மேற்கோள் காட்டி **ரோமர் 3:10–12ல்** மனிதனின் இக்கட்டான நிலையை, சாரம்சமாகச் சொல்லுகிறார். "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழி தப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை". தன்னுடைய விசுவாசத்தின் மிகப்பெரிய சோதனைக்குள்ளாகிக் கடந்து வந்த யோபு சொல்லுகிறார், "ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்" **(யோபு 42:6).** விசுவாசமுள்ள தீர்க்கதரிசி ஏசாயா தேவனிடத்திலிருந்து தனக்கு தரிசனம் கிடைத்தபோது தான் ஒரு "அசுத்த உதடுகளுள்ள மனுஷன்" என்று அறிக்கை செய்தார் **(ஏசாயா 6:5).** இப்படியாக நம்மை நாமே பார்த்துக் கொண்டு நாம் மிகவும் நல்ல ஆண்கள், நல்ல பெண்கள், என்று சொல்லிக் கொள்கிறோம். தேவனோடு ஒப்பிடும்போதோ, நாம் பாவமுள்ள சிருஷ்டிகளாயிருக்கிறோம். தேவனுடைய அளவுகோல் பரிபூரணம். அது, மனுஷருடைய நல்லா குணாதிசயம் என்பதிலிருந்து மிகவும் உயர்ந்தது. இப்படியாக, தொழுகையில் ஒருவர் தனது பாவத்தை உணர்ந்து தேவனிடத்தில் கிட்டிச் சேருவதற்கு தான் தகுதியற்றவன் என்றும் உணருகிறான் **(லூக்கா 5:8; ஏசாயா 6:5).** இது தொழுகை செய்பவரை நன்றியுள்ளவராகவும் தாழ்மையுள்ளவராகவும் உயர்த்துகிறது.

<u>மூன்றாவதாக, நாம் சரியான முறையில் கடமையாற்ற வேண்டும்.</u> சரியான முறையில் கடமையாற்றுவது என்பதன் பொருள் என்ன? நாம் சரியான முறையில்

கடமையாற்றுவதில் அநேக காரணிகள் உட்பட்டுள்ளன. ( 1 ) நாம் ஒரு ஆதரவின் கீழ் இருக்கிறோம் என்ற தாழ்மையுடன் கூடிய உணர்வு நமக்கு இருக்க வேண்டும். எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் தேவன். எனவே நாம் எல்லாருமே அவரிலிருந்து வந்தவர்கள். (2) நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும். வேதாகமம் எப்பொழுதும் மனிதனுடைய பகுதியில் இருக்க வேண்டிய நன்றியறிதலுள்ளவர்களாயிருப்பதை ஊக்கப்படுத்துகிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" என்று எழுதினார் (எபேசியர் 5:20). (3) அதேபோல நாம் சந்தோஷத்தால் நிரப்பப்பட்டவர்களாயிருக்க வேண்டும். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலிப்பியர் 4 :4) "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக" என்று எழுதுகிறார் (ரோமர் 15:13). (4) நாம் நமது வாழ்க்கையை அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1). சரியாகத் தொழுகை செய்வது மட்டும் போதுமானதல்ல; அவ்வாறாதனை பரிசுத்த வாழ்க்கையில் நம்மை கொண்டு செல்ல வேண்டும். நாம் நம்முடைய வாழ்க்கையை வாழ்கின்ற விதத்திலிருந்து, நமது தொழுகையைப் பிரித்துப் பார்க்க முடியாது. நமது வாழ்க்கை பரிசுத்தமாய் வாழ்வதற்கு ஒத்துப் போகாவிட்டால், நமது தொழுகையை தேவன் அருவருக்கிறார். "உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. உங்கள் தகனபலிகளையும், போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கிப் பார்க்க மாட்டேன்" என்று ஆமோஸ் எழுதினார் (ஆமோஸ் 5:21–22). இஸ்ரவேலர்கள் சரியான தொழுகையைச் செய்யவில்லை என்பது ஆமோஸின் நாட்களில் இருந்த பிரச்சனை அல்ல; ஆனால் அவர்களுடைய தொழுகை பரிசுத்தமாய் வாழ்வதற்கு அவர்களை இட்டுச் செல்லவில்லை. இப்படியாக

தேவன் அவர்களுடைய தொழுகையைப் புறந்தள்ள வேண்டியதாயிற்று.

## தொழுகையின் நோக்கம்

தொழுகையில் அநேக நோக்கங்கள் இருப்பதாக வேதாகமம் சொல்லுகிறது. உண்மையில் தேவனை மகிமைப்படுத்துவதே பிரதான நோக்கமாகும். "ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்றார் பவுல் **(1 கொரிந்தியர் 10:31).** தேவன் மட்டுமே ஸ்தோத்தரிக்கவும் துதிக்கவும் படைத்தக்கவர். நாம் பிரதிபலிக்கிற ஒவ்வொரு செயலும் தேவன் நமக்குள் ஜீவிக்கிறார் என்பதைக் காட்ட வேண்டும். தொழுகையைக் காட்டிலும் இதைச் செய்வதற்கு வேறு எந்த வழியுமில்லை. எபேசியருக்கு எழுதிய தனது நிரூபத்தில் பவுல் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் " என்றார். **(எபேசியர் 3:21)**

இரண்டாவது நோக்கம் சக கிறிஸ்தவர்களை பக்திவிருத்தி அடையச் செய்வது. "சபை கூடிவருதலை சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ", அவ்வளவாய்ப் புத்தி சொல்லக்கடவோம்," என்று சொல்லப்பட்டுள்ளது **(எபிரேயர் 10:25).** இது சபை கூடிவருவதை மீண்டுமாக வலியுறுத்துகிறது. ஏனெனில், ஒன்றாகக் கூடிவராமல் நாம் ஒரு போதும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்த இயலாது. பவுலும் கூட **1 கொரிந்தியர் 14:26ல்,** சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது என்று சொன்னார். **1கொரிந்தியர் 14ல்** மட்டும், "கட்டப்படுதல்" அல்லது "பக்தி விருத்திக்கு" எனும் வார்த்தைகள் ஏழுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சபைத் தொழுகையில், ஆவிக்குரிய வரங்கள் உட்பட்ட விஷயங்களில் குழப்பப்படுவதை பவுல் சரிபடுத்துகிறார்; ஏனெனில், பக்திவிருத்தி உண்டாக போதனையும், சாதுரியமான பேச்சுக்களும் தேவை. இருப்பினும், பிரதான நோக்கங்களில் ஒன்று சக

கிறிஸ்தவர்களைப் பக்தி விருத்தியடையச் செய்வது தான்.

தொழுகையின் மற்றொரு நோக்கம், நமது இரட்சிப்பையும் நம்முடைய ஐக்கியத்தையும் தெரிவிக்க அல்லது நினைவுபடுத்த கிறிஸ்துவின் சரீரமாக செயல்படுவது. "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தினுடைய ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாம் எல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமாயுமிருக்கிறோம்." என்று பவுல் குறிப்பிட்டார் **(1 கொரிந்தியர் 10:16–17).** அடுத்த அதிகாரத்தில், கர்த்தருடைய பந்தியை அவமாக்கினதை பவுல் சரிபடுத்தும்போது, வசனம் 26ல், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று எழுதினார். இதன்படி, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது, தொழுகையில் கலந்து கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்குப் போதிக்கும்படி இயேசுவின் தியாகத்தையும் மரணத்தையும் தெரிவிக்கிறோம்; அதேப்போல சக கிறிஸ்தவர்களுக்கு பரஸ்பரம், பெற்ற இரட்சிப்பையும் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்தையும் நினைப்பூட்டுகிறோம்.

## முடிவுரை

இந்தப் பாடத்தில் தொழுகை என்றால் என்ன என்பதையும், தொழுகையின் நோக்கங்களையும் கற்றுக்கொண்டோம். இன்றைய தொழுகைகளில் அநேகக் குழப்பங்கள் வந்துவிட்டன. ஏனெனில், தொழுகையின் நோக்கத்தை நாமெல்லாம் மறந்து போனோம். மாறாக, நம்மைப் பிரியப்படுத்தும் சில விஷயங்களுக்குத் திரும்பிவிட்டோம். அடுத்து வரும் பாடங்களில், நாம் தேவனுக்குச் செய்யும் தொழுகையில் இடம் பெறுகிற ஒவ்வொரு செயலையும் விளக்கமாகக் காண்போம்.

# 2. நாம் எங்கே தொழுது கொள்ள வேண்டும் ?

ஆண்களும் பெண்களும் எப்பொழுதும் தொழுகையின் மூலம் தேவனை அணுகியுள்ளனர். ஆரம்பத்தில் கூட, காயீனும் ஆபேலும் தேவனுக்கு காணிக்கை செலுத்தியதை நாம் வாசிக்கின்றோம் (**ஆதி 4:15**). இருவருமே காணிக்கை கொண்டு வந்திருந்த போதிலும், ஆபேலின் காணிக்கை (பலி) மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. மூதாதையர்களின் யுகத்தில், தேவனுக்கு தொழுகை செய்தபோது ஒவ்வொரு குடும்பமும் தங்கள் சொந்த பலிகளைச் செலுத்தினர். சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேல் புத்திரருடன் உடன்படிக்கை செய்தபோது, அவர்களுடைய அனைத்துத் தொழுகைகளும் லேவியர்களின் அமைப்பிலிருக்கும் ஆசாரியர்களால், ஆசரிப்புக் கூடாரத்தில் செய்யப்பட வேண்டும் என்பதை குறிப்பாக தேவன் சொன்னார்.

பின்னர், சவுல் ராஜாவைக் கொண்டு துவக்கம் பெற்ற இஸ்ரவேல் ராஜ்யத்தில், தற்காலிக ஆசரிப்புக் கூடாரம் எருசலேமில் கட்டப்பட்ட தேவாலயத்தால் மாற்றப்பட்டது. இப்படியாக, அப்பொழுதிலிருந்து எருசலேமில் தொழுகை நடப்பிக்கப்பட்டது. ஆகிலும், கிறிஸ்து மூலம் ஸ்தாபிதம் பெற்ற உடன்படிக்கையின் கீழ், எங்கு வேண்டுமானாலும் தொழுகை செய்யலாம். இயேசு, யோவான் 4ம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி சமாரிய ஸ்திரீயிடம் பேசிக்கொண்டிருந்தபோது, தொழுகை செய்ய சரியான இடம் எது என்று அவள் அவரிடம் கேட்டாள். அவளுடைய முற்பிதாக்கள் சமாரியாதான் தொழுகைக்கு ஏற்ற இடமென்றும், யூதர்கள் எருசலேம்தான் சரியான இடம் என்றும் சொன்னார்கள்.

அதற்கு இயேசு : "ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" என்றார் (**யோவான் 4:21**). இன்னொரு வார்த்தையில் சொன்னால், நாம் தொழுகை செய்வதற்கு குறிக்கப்பட்ட இடம் முக்கியமானதல்ல. இப்பொழுது, உலகிலுள்ள சகல தேசத்திலுமிருக்கும் தேவனுடைய ஜனங்களும், அவரவர் தேசத்தில் அவரவர் தங்கியிருக்கும் ஸ்தலத்திலேயே தொழுது கொள்ளலாம்.

## எப்பொழுது நாம் தொழ வேண்டும்?

மோசேயின் பிரமாணத்தின் காலத்தில், இஸ்ரவேலர்கள், ஓய்வு நாளில் ஆசரிக்கும்படி கட்டளையிடப்பட்டனர். "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;

ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" **(யாத்திராகமம் 20:8–11).**

இந்த உடன்படிக்கை இஸ்ரவேலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. பின்னர் மோசே, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார். அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" என்று சொன்னார் **(உபாகமம் 5:2,3).** ஓய்வு நாளை உட்படுத்திய இந்த உடன்படிக்கை, இஸ்ரவேல் ஜனத்தாரோடும் அவர்களுடைய சந்ததியார்களோடும் மட்டுமே செய்யப்பட்டது. அவர்களுடைய முற்பிதாக்களோடோ, புறஜாதிகளோடோ செய்யப்படவில்லை.

இந்த உடன்படிக்கையை இயேசு சிலுவையிலே அறைந்தார். "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" **(கொலோசெயர் 2:14).** ரோமர் 7ல் பவுல், நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களாகி, கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களானோம் என்று போதித்தார். பிறகு வசனம் 7ல், அவர் குறிப்பாக, "இச்சியாதிருப்பாயாக" என்னும் கட்டளையைக் குறிப்பிட்டு, இதைப் போன்ற கட்டளைகளில் ஒன்றுக்கு நாம் மரித்தவர்களானோம் என்று சொன்னார். இது பத்து கட்டளைகளில் ஒன்றாகும் **(யாத்திராகமம் 20:17)** அதாவது பத்துக் கட்டளைகளில் ஒன்றுக்கு, ஒருவர் மரித்தவரானால், பிறகு அவர் நியாயப்பிரமாணம் முழுமைக்கும் மரித்தவராகிறார். இப்படியாக, நாம் இனியும் ஓய்வு நாளை பரிசுத்தமாய் கைக்கொண்டு ஓய்வு நாளில் தொழுகை செய்ய வேண்டுவதில்லை.

புதிய உடன்படிக்கையின் கீழ், நாம் வாரத்தின் முதலாம் நாளில் தொழுகை செய்ய வேண்டியவர்கள். ஆதிச்சபை துவக்கத்திலிருந்தே வாரத்தின் முதல் நாளில் தொழுகை செய்து வந்தது. துரோவாவிலிருந்த சபையில் வாரத்தின் முதல் நாளில்தான் பவுல், சபையாருடன் கூடி வந்தார் **(அப்போஸ்தலர் 20:7).** இருப்பினும், அவர் அந்தப் பட்டணத்தில் ஏழு நாள் தங்கினார்; இதன் மூலம், ஏதோ ஒரு சிறப்புக் கூட்டத்தில் பவுலின் பிரசங்கத்தைக் கேட்க கூடிவந்த கூட்டமல்ல என்பதை வேதம் சுட்டிக் காட்டுகிறது. அது சாதாரணமாக, வழக்கம்போல் தொழுகை செய்யும்

நாளாகவே இருந்துள்ளது. அவர்கள் **"அப்பம் பிட்கும்படி கூடிவந்திருக்கையில்"** (அதாவது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி கூடிவந்தபோது) என்று சொல்லப்படுவதால், பவுலின் பிரசங்கத்தைக் கேட்கும்படியாக மட்டும் கூடிவரவில்லை. பவுல் கொரிந்து பட்டணத்து சபையாரை வாரத்தின் முதல் நாளிலே காணிக்கையைக் கொடுக்கும்படி கட்டளையிட்டார் **(1 கொரிந்தியர் 16:2).** இது மீண்டுமாக வழக்கம்போல் தொழுகை செய்யும் நாளாகக் குறிப்பிடுகிறது.

வாரத்தின் முதல் நாளிலே சபை கூடி தொழுகை செய்வது என்பது இயல்புதானே; ஏனெனில் அனைத்து முக்கியமான காரியங்களும், சபையின் ஸ்தாபிதமும் வாரத்தின் முதலாம் நாளில்தான் நிகழ்ந்தது; இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதல் நாள். ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் கல்லறைக்கு வந்தனர் **(லூக்கா 24:1).** கல்லறையில் பிரகாசமான வெண் வஸ்திரத்துடன் காணப்பட்ட இரண்டு பேர் **(லூக்கா 24:4)**இயேசு சொன்ன வார்த்தைகளை நினைப்பூட்டினார்கள், "மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவு கூருங்கள்" என்றனர் **(லூக்கா 24:7).**

இயேசு ஒரு வெள்ளிக்கிழமை சிலுவையில், அறையப்பட்டார். யூதருடைய கணக்கீட்டின்படி, ஒரு நாளின் எந்த வேளையாக இருந்தாலும் முழு நாளாகக் கணக்கிடப்படும்; இந்த வகையில் அவர் மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். அதே நாளிலே இரண்டு மனுஷர்கள் எம்மாவூர் எனப்பட்ட கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள் **(லூக்கா 24:13),** அப்பொழுது இயேசு அவர்களுக்குத் தரிசனமானார்; ஆனாலும் அவர் யாரென்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் இப்படிப் பேசி சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், இந்த மனுஷர்கள் அவரிடம், "அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பார் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது", என்றார்கள் **(லூக்கா 24:21).** இப்படியாக, கிறிஸ்து தாம் முன்னுரைத்தபடியே வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று அனைவருமே அறிந்துள்ளனர்.

இயேசு கிறிஸ்து தமது சீஷர்களோடு வாரத்தின் முதல் நாளில் அவர்கள் கூடியிருந்த இடத்தில் அவர்களைச் சந்தித்தார் **(யோவான் 20:19),** ஆனாலும் அந்தக் கூட்டத்தில் தோமா இருக்கவில்லை. அடுத்த வாரத்தின் முதல் நாளில் **(யோவான் 20:26),** இயேசு மறுபடியும் தமது சீஷர்களுக்குத் தரிசனமானார்; இந்த முறை

தோமாவும் இதில் இருந்தான். பெந்தெகோஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நாள் எப்பொழுதும் வாரத்தின் முதல் நாளில் தான் வரும் (**லேவியராகமம் 23:15-16**). இந்த நாளில் தான் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினார். முதல் சுவிசேஷப் பிரசங்கம், **ஏசாயா 2:2-4ன்** நிறைவேற்றமாகப் பிரசங்கிக்கப்பட்டது. அந்த நாளில், 3000 ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, இவ்விதமாக சபை அந்நாளில் ஸ்தாபிதம் பெற்றது. (**அப்போஸ்தலர் 2:41**). அதிலிருந்து, சபை வாரத்தின் முதல் நாளில் மட்டும் தொழுகை செய்து வந்ததாக வாசிக்கிறோம். முதல் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாயிருந்த போதிலும், யூதர்கள் ஓய்வு நாளில் தொழுகை செய்து வந்திருந்த போதிலும், இப்பொழுதிலிருந்து வாரத்தின் முதல் நாளில் தொழுகை செய்து வந்தனர்.

## பிரசங்கித்தல் அல்லது போதித்தல்

நம்முடைய தொழுகையில் முக்கியமான பகுதிகளில் ஒன்று தேவனுடைய வசனத்தைக் கற்றுக் கொள்ளுதல். வழக்கமாக ஒரு நபர் தேவனுடைய வசனத்தின் ஒரு பகுதியிலிருந்து ஒரு பிரசங்கத்தையோ அல்லது ஒரு அறிவுரையையோ வழங்குவார். ஆனால் நாம் ஒன்றாகச் சேர்ந்து தேவனுடைய வசனத்தைக் கற்றுக்கொள்ள, அது மட்டும் போதுமானதல்ல. இதன் முக்கியத்துவம் என்னவென்றால், தேவனுடைய வசனம் போதிக்கப்படுவதன் மூலம் சபையானது பக்திவிருத்தியடைகிறது. தேவனுடைய வசனம் போதிக்கப்படவேண்டிய அவசியத்தை அநேக வசனப்பகுதிகள் வலியுறுத்துகின்றன. துரோவா பட்டணத்து சபைக்கு பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தார் (**அப்போஸ்தலர் 20:7**). "இதனிமித்தமாக எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்த சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்." (**1 கொரிந்தியர் 4:17**). "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்தி சொல்லு" (**2 தீமோத்தேயு 2:1-2**).

தேவன், தமது இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு, பிரசங்கத்தை வழியாக தெரிந்துகொண்டார். "எப்படியெனில், தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே

விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" **(1 கொரிந்தியர் 1:21).** இயேசு கிறிஸ்துவை சிலுவையிலறையப்பட்ட அவரேயன்றி, வேறொன்றையும் அவர்களுக்குள்ளே அறியாதிருக்க பவுல் தீர்மானித்திருந்தார் **(1 கொரிந்தியர் 2:2).** மேலும், அவர் மனுஷருடைய ஞானத்தினால், அவர்களுடைய விசுவாசம் கட்டப்பண்ணுவதை அவர் விரும்பவில்லை **(1 கொரிந்தியர் 2:4). 1 கொரிந்தியர் 14ல்** பவுல், அவர்கள் தீர்க்கதரிசன வரங்களையும் அந்நிய பாஷையையும் தவறாகப் பயன்படுத்தப்படுவதை சரிசெய்து திருத்தும்படி எழுதுகிறார். முக்கியமான நோக்கம் சபையை பக்திவிருத்தியடையச் செய்வதுதான் **(14:4, 5),** சொல்லப்பட்டவைகளை ஜனங்கள் புரிந்துகொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும். வசனம் 26ல் பவுலின் முடிவுரையைக் கவனியுங்கள், "சகலமும் பக்திவிருத்திக்கு ஏதுவாக செய்யப்படக்கடவது". தேவனுடைய வசனத்தை புரிந்துகொள்வதனால் மட்டுமே ஒருவர் ஆவிக்குரிய வகையில் பக்திவிருத்தியடைய முடியும். ஆகையால், நாம் தொழுதுகொள்ள கூடிவரும்போது, பிரசங்கம் (அல்லது) போதித்தலுக்கு அதில் உள்ள முக்கியத்துவத்தை நாம் காணமுடிகிறது.

பிரசங்கித்தல் அல்லது போதித்தல் என்பது தொழுகையில் முக்கியப் பங்காற்றுகிறது. பிரசங்கித்தல் என்பது, ஏதோ ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சிக்காகவோ, அல்லது யாரோ ஒருவர் தனது பேச்சு சாதுரியத்தைக் காட்டுவதற்கான ஒரு நேரமோ அல்ல. பிரசங்கித்தல் மூலம் தொழுகை செய்பவர் தேவனைக் காணவும் கேட்கவும் செய்கிறது. போதிக்கும் ஆசிரியர் தனக்கு செவிசாய்ப்பவர்களுக்கு தேவனுடைய செய்தியைக் கொண்டுவந்து சேர்க்கக்கூடியவராக இருக்கிறார். பிரசங்கித்தல் ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் வசனத்தைப் பயன்படுத்தச் செய்கிறது. பிரசங்கத்தின் மூலம் ஒருவர் தேவனையும், நம்மை நாமே கூட காணச் செய்கிறது; மேலும், தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நமது கடமையையும் காணச் செய்கிறது. வேதாகமக் கல்வி தேவையானதும் மிக அதிகமான உதவிகரமாயுமிருப்பதால், யார் வேண்டுமானாலும் பிரசங்கிக்கலாம். ஒருவருக்குத் திறமையிருக்குமானால், ஒரு வினயமான கற்றலுக்கு தன்னை ஆயத்தப்படுத்த ஒருவர் விருப்பமுள்ளவராயிருப்பாரானால், பிறகு அவரை பிரசங்கிக்கும்படி அனுமதிக்கலாம். ஒருவேளை அவர் தாம் சுயமாய்க் கற்றுத் தேர்ந்திருந்தாலும் இது பொருந்தும். பிரசங்கிப்பது என்பது "உயர்ந்தவர்" என்ற கருத்துடைய மேன்மக்களுக்குரியது மட்டுமே என்ற வரையறையில்லை. இந்தக் கருத்து மனுஷருடைய கண்டுபிடிப்புத்தானேயன்றி திருமறையில் போதிக்கப்பட்ட கருத்தல்ல.

# 3. ஜெபம்

நாம் தேவனுக்குச் செய்யும் தொழுகையில், ஒரு முக்கியமான பகுதியாக இருப்பது ஜெபம் என்பது தெளிவு. இது குறித்து வேதாகமம் அடிக்கடி அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. ஜெபத்தைக் குறித்துப் பேசுகிற ஒரு சில வசனங்களைக் கவனியுங்கள். "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்" **(லூக்கா 18:1).** "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்" **(ரோமர் 12:12).** "எந்தச் சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" **(எபேசியர் 6:18).**

## ஜெபம் என்றால் என்ன?

முதலாவதும் மிகச் சிறப்புமானது, ஜெபம் தான் தேவனிடத்தில் நாம் பேசுவதற்கான வழி. அது தேவனை நோக்கியதாக இருக்கவேண்டும். அது முழு நம்பிக்கையுடன் கூடியதாக இருக்கவேண்டும். அது உண்மையானதாக அல்லது இருதயத்திலிருந்து வரக்கூடியதாக இருக்க வேண்டும். அது ஏதோ மந்திரம் ஓதுவது போல், சரியான வார்த்தைகளைப் பயன்படுத்துவது அல்ல. அது நமது நடத்தையின் குணாதிசியங்களைக் கொண்டது. 1 **தெசலோனிக்கேயர் 5:17**ல், "இடைவிடாமல் நாம் ஜெபிக்க வேண்டும்" என்று பவுல் எழுதுகிறார். ஒரு நாளின் இருபத்திநான்கு மணிநேரமும், நமது மனதிலும் நமது உதடுகளிலும் ஜெபம் இருந்து கொண்டிருக்கவேண்டும் என்பது நிச்சயமாக இதன் பொருளல்ல. இடைவிடாமல் ஜெபித்தல் என்பதன் எளிய பொருள், தேவன் நம்முடைய மனதிலிருந்து வெகு தொலைவில் இல்லை என்பதும்; நம்முடைய இருதயத்திலிருந்தோ, வாழ்க்கைகளிலிருந்தோ மற்றும் மனதிலிருந்தோ வெகு தொலைவில் தேவன் இல்லை என்பதே! ஜெபம் எப்பொழுதும் இயல்பாக நமது வாழ்வில் இருக்க வேண்டும் என்பதுமேயாகும். எப்பொழுதுமே நாம் ஒரு சுருக்கமான ஜெபம் செய்து தேவனுடைய வழிநடத்துதலுக்கும், உதவிகளுக்குமாகக் கேட்கக் கூடும். ஆதி சபையார் ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருந்தார்கள் **(அப்போஸ்தலர் 2:42).**

ஜெபம் ஒரு மந்திரம் ஓதுவது போன்ற சூட்சமம் அல்ல, அல்லது உலகப்

பொருளுக்கும் சுயநலத்துக்குமான ஒரு குறுக்கு வழியல்ல. தேவன் தமது ஜனங்களின் ஜெபத்தைக் கேட்பதாக வாக்குறுதி கொடுத்திருப்பதால் **(மத்தேயு 21:22),** அனைத்தும் அவருக்குக் கீழ்ப்பட்டவை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். **யாக்கோபு 4:1−6ல்** தேவனிடத்தில் சில காரியங்களைக் கேட்ட சில கிறிஸ்தவர்கள், அவைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். அவர்கள் தங்கள் சுயஇச்சைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று தகாத விதமாய் ஜெபித்ததால், அவர்களுடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை என்று யாக்கோபு சுட்டிக்காட்டினார். இப்படியாக ஜெபம் என்பது தேவனிடத்திலிருந்து கிடைக்கப் பெறுகிற ஒரு காசோலையாக(Cheque) நாம் கருதிவிடக் கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம், நாம் கேட்க வேண்டும் அப்பொழுது பெற்றுக்கொள்வோம்!

ஜெபம் என்பது ஒரு அறுதி பேரமல்ல. அறுதியிட்ட பேரத்தில் தேவனிடம் நாம் ஜெபிக்கும்போது, "நீர் என்னை ஆசீர்வதித்தால், நான் உமக்குச் சேவை செய்யத் துவங்குவேன்" என்று பேரம் பேச முற்படுவதாகும். நாம் செய்யும் சேவையெல்லாம், ஏற்கனவே தேவன் நமக்குச் செய்திருப்பவைகளுக்காகவே! நமது ஊழியக் காரியங்களில் வெறுமையான வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, அவைகளை நிறைவேற்றாமலேயே கர்த்தர் மேலும் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென வற்புறுத்த இயலாது. அல்லது, ஜெபத்தை அவசர நேரங்களில் பயன்படும் ஒரு கருவியாகவும் பார்க்கக்கூடாது. எப்படியிருப்பினும், உபத்திரவங்கள் கடந்து போகும் போது, அவர்கள் தேவனை மறந்து தங்களுடைய முந்தின வாழ்க்கைக்கே திரும்புகின்றனர்.

## யார் ஜெபிக்க வேண்டும் ?

அநேகர் இக்கேள்விக்கு அவசரமாக ஒவ்வொருவரும் ஜெபிக்க வேண்டும் என்று பதில் சொல்லிவிடுவார்கள்; ஜெபிக்கிற எந்த ஒருவரையும் நான் உற்சாகமிழக்கச் செய்ய மாட்டேன் என்றாலும், ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு அறுதியிட்ட ஆசீர்வாதமாக உணரப்படவேண்டும். தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தைச் சாராதவர்களின் ஜெபத்தை தேவன் கவனிப்பார் என்பதற்கான வாக்குறுதி எதுவுமில்லை. "துன்மார்க்கருக்கு கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களுடைய ஜெபத்தையோ கேட்கிறார்" **(நீதிமொழிகள் 15:29). 1 பேதுரு 3:12 ல்,** பேதுரு **சங்கீதம் 34**லிருந்து மேற்கோள் காட்டி, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை

செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது". வேறு சில வசனங்களும் இத்துடன் சேர்க்கப்படலாம். ஆனாலும் ஜெபத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து வசனங்களும், தேவனுடைய மக்களுக்கு அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே எழுதப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதற்கு மேலும், நீதியுள்ள வாழ்க்கையை வாழுகிற கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே ஜெபத்திற்கான சிலாக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. **1 யோவான் 3:22ல்,** "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால், நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்," என்று சொல்லப்படுகிறது.

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதில் கொடுப்பார் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டுள்ளது, என்று யோவான் எழுதியிருப்பதைக் கவனியுங்கள்; இதன் மூலம் கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழாதவர்கள் இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை அனுபவிக்க இயலாது என்பது புலனாகிறது.

கிறிஸ்தவர்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர். "நீங்கள் சொஸ்தம் அடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." **(யாக்கோபு 5:16)** இந்த வார்த்தைகள் அனைத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டவை. இதில் நீதிமான்கள் செய்யும் ஜெபம் மிகவும் பெலனுள்ளவை என்றும், ஒரு பிரசங்கியாரோ, பாதிரியாரோ ஜெபிக்கிறதினாலே மட்டும் அல்ல என்றும் நமக்குச் சொல்லப்படுகிறது. அதே வேளையில் ஒரு பிரசங்கியாருடைய ஜெபம் அல்லது ஒரு பாதிரியாரின் ஜெபம் மற்ற எந்த ஒருவருடைய ஜெபத்தையும்விட பெலனுள்ளது என்று எங்கும் சொல்லப்படவில்லை. முக்கியமானது என்னவெனில், ஒருவருடைய ஆஸ்திகளின் அடிப்படையிலல்ல ஒருவருடைய வாழ்க்கையின் முறையே முக்கியத்துவமானது. ஜெபம், கீழ்ப்படிதலுக்குப் பதிலாக செய்யப்பட வேண்டிய ஒன்றல்ல. உண்மையில், சில வேளைகளில் தேவன் ஒரு சிலரை ஜெபிக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். **(யாத்திராகமம் 14:15; அப். 22:16)**

**1 *தீமோத்தேயு* 2:8ல்** பவுல், "அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டுமென்று விரும்புகிறேன்." என்று எழுதினார். கிரேக்க பதத்தில் புருஷர்கள் என்பது ஆண்களை மட்டும்

குறிக்கிறது. ஸ்திரீகளுக்கும், அல்லது மனுஷர்களைக் குறிக்கும் பொதுவான வார்த்தைக்கும் வேறே பதங்கள் குறிப்பிடப்படுகின்றன. இப்படிப் பொதுவான ஜெபத்தைச் செய்ய ஆண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. கைகளை உயர்த்தி ஜெபிப்பது குறித்து ஜனங்கள் அடிக்கடி கேள்விகள் கேட்பதுண்டு. கைகளை உயர்த்தி ஜெபிப்பதில் தவறுகள் ஏதும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக இது கட்டளையிடப்பட்ட காரியமல்ல. ஜனங்கள் வித்தியாசப்பட்ட கோணங்களில் ஜெபித்ததாக வசனம் குறிப்பிடுகிறது. ஆனால் பெரும்பாலும் முழங்கால்படியிட்டு, அல்லது நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து பணிந்துகொண்டதாகவெல்லாம் சொல்லப்படுகிறது. ஆகிலும், நம்முடைய ஜெபங்களில் சரீரக்கோணம் முக்கியமானதல்ல; மாறாக, பவுல் நமது வாழ்வில் இருக்க வேண்டிய பரிசுத்தத்தையே வலியுறுத்துகிறார். ஜெபிக்கிற மனுஷர்கள் பரிசுத்தமுள்ளவர்களும், கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையை வாழுகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

## எவைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் ?

நமது ஜெபங்களில் அநேகக் காரியங்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மிகமுக்கியமாக, நாம் தேவனுக்கு ஸ்தோத்திரங்களைச் சொல்லுகிறோம். தேவன் மட்டுமே ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர். இத்துடன் தொடர்புபடுத்தி, அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நம்முடைய நன்றியறிதலும் சேர்க்கப்பட வேண்டும். அவருடைய பொருளாதார ரீதியான மற்றும் விசேஷமாக ஆவிக்குரிய ரீதியான ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்" **(பிலிப்பியர் 4:6−7).** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" **(கொலோசெயர் 4:2).** பவுலும் நம்முடைய ஜெபத்தில், தனிபட்ட தேவைகளுக்காக ஜெபிக்கச் சொல்வதை கவனியுங்கள். தனிப்பட்ட தேவைக்கான ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்பது சுயநலமோ, பாவமோ அல்ல. நம் தேவனிடம், வழிநடத்துதலுக்கும் ஞானத்துக்காகவும் கேட்டு ஜெபிப்பது நமக்கு அவசியம் **(யாக்கோவு 1:5).** நாம் ஏழைகள், வியாதிப்பட்டவர்கள், ராஜாக்கள், பிற கிறிஸ்தவர்கள் போன்ற மற்றவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் **(யாக்கோபு 5:16).** நமது ஜெபத்தில் ஒரு விசேஷித்த முக்கியப் பகுதியாக காணுவது அறிக்கையிடுதல்; நமது

விசுவாசத்தையும் நமது பாவங்களையும் அறிக்கையிட வேண்டும். **1 யோவான் 1:8,** ஒருவருக்கொருவர் நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்மை மன்னிப்பதற்கு தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்று சொல்லுகிறது. அறிக்கையிடுதலுடன் இணைந்து வருவது, மனந்திரும்புதலும் பாவமன்னிப்பைக் கோருவதுமாகும். இதற்கு தேவன் உண்மையுள்ளவரும், சார்ந்திருக்க ஏதுவானவரும் அல்லது பாத்திரராயுமிருக்கிறார். நம்மை மன்னிப்பதாக தேவன் வாக்களித்துள்ளார்; மேலும், தாம் வாக்களித்ததை தேவன் செயல்படுத்துவார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகிலும், நாம் மற்றவர்களை மன்னியாதிருந்தால், தேவனும் நம்மை மன்னிக்கமாட்டார் **(மாற்கு 11:26).**

## நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் ?

நமது ஜெபத்தின் மிக முக்கியமான பகுதி, நமது எண்ணங்களே! தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள பலமான விசுவாசம், ஒரு நேர்மையான இருதயத்தில் இருந்து நமது ஜெபங்கள் வர வேண்டும். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது". **(மத்தேயு 15:8).** நேர்மையான இருதயத்துடன் சம்பந்தப்பட்டிருப்பது, தாழ்மை மற்றும் சரியான நோக்கத்துடனும் ஜெபிப்பது ஆகும். நீண்ட ஜெபங்களைச் செய்யவேண்டும் என்று அவசியமில்லை **மத்தேயு 6:5–8ல்** அஞ்ஞானிகள் தங்கள் ஜெபங்களில் அலப்புவதைக் குறித்து இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார். சொன்னவைகளையே மறுபடியும் மறுபடியும் பேசுவதால் நமது ஜெபம் பெலனுள்ளதாயிருக்காது. வேதகாமத்தில், பெரிய விசுவாசிகளின் ஜெபங்களெல்லாம் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பார்த்தால் மிகச் சுருக்கமான ஜெபங்களையே செய்துள்ளனர். நாம் தேவனிடத்தில் பயபக்தியுடன் ஜெபிக்க வேண்டும். தேவன் தேவனே! நாம் மனுஷர்கள் என்ற எண்ணம் எப்பொழுதும் நமக்குள் இருக்க வேண்டும். "தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு. தேவன் வானத்திலிருக்கிறார். நீ பூமியிலிருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" **(பிரசங்கி 5:2).**

இயேசுவை நாம் மத்தியஸ்தராய்க் கொண்டு தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். "தேவன் ஒருவரே. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே." **(1 தீமோத்தேயு 2:5,6).** இரண்டு கூட்ட மக்களுக்கிடையே (சாமாதானம்) பேசுபவர் மத்தியஸ்தர். இந்த

விஷயத்தில், தேவனுக்கும் மனுஷருக்குமிடையேயான மத்தியஸ்தர் அவர். ஒரு நல்ல மத்தியஸ்தன் இரண்டு கூட்ட மக்களின் சூழ்நிலைகளையும் நன்கு அறிந்திருப்பார். இப்படியாக, ஒருவருக்கு இயேசுவைக் காட்டிலும் சிறப்பான மத்தியஸ்தன் இருக்க முடியாது. அவர் தேவனை அறிந்திருந்தார். ஏனெனில் அவரே தேவனாயிருந்தார்; அவர் மனுஷனையும் அறிவார். ஏனெனில், அவர் மனுஷனைப் போலவே மாம்சத்தில் வந்தார் (**பிலிப்பியர் 2:5–11**). பவுலும் கூட உறுதிப்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபத்தை தேவனிடத்தில் ஒப்புவிக்கக் கூடியவராய் இருக்கிறார் என்று சொன்னார். “அந்தப்படி ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுக்களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னெதன்று அறிவார்” (**ரோமர் 8:26, 27**) வாக்குக்கடங்காத பெருமூச்சுக்களோடு என்பது தேவனுக்கு மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய ஒரு பாஷையல்ல; மாறாக அவை மனுஷனுடைய பெருமூச்சல்ல, ஆவியானவரின் துக்கத்தின் பெருமூச்சு. ஆவியானவர் செய்கிற எல்லாவற்றையும் நாம் அறிந்து கொள்ள இயலாவிட்டாலும், ஆவியானவரும் கிறிஸ்துவும் நமது விண்ணப்பங்களைக் கொண்டுபோய் அவைகளை தேவனுக்கு முன்பாக அவருடைய சித்தத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். இது நமக்கு ஒரு பெரிய உற்சாகம் அளிக்கும் காரியமாக இருக்கக் கூடும்.

ஜெபம் என்பது, மேலும் நமது ஜெபங்கள் கேட்கப்பட நாம் என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்வதாகும். எதையும் செய்யாமலேயே மற்றவர்களுக்கு நம்முடைய ஜெபம் உதவிகரமாயிருப்பது அவ்வளவு எளிதல்ல. **யாக்கோபு 2:15–16ல்** யாக்கோபு இப்படிப்பட்ட எண்ணத்திற்கு எதிராக எச்சரித்திருக்கிறார்; “ ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி : நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளைக் கொடாவிட்டால், பிரயோஜனமென்ன?” என்று கூறுகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், யாரோ ஒருவருக்காக வெறுமனே ஜெபிப்பது எவ்வித நன்மையும் பயக்கப் போவதில்லை; தேவையுடையோருக்கு நாம் கொடுக்க வேண்டும். தேவன் தமது ஊழியக்காரர்கள் மூலமாக, ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார்; ஆகையால், நாம் உண்மையாக எதுவும் செய்யாமல், நமது கடமையைச் செய்துவிட்டோம் என்ற நினைவில் யாருக்காகவும் ஜெபிப்பது அவ்வளவு எளிதல்ல.

# 4. கர்த்தருடைய பந்தி

எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும், கர்த்தருடைய பந்தியாகிய ஐக்கியப் பந்தி என்று அழைக்கப்படுகின்ற இது, தொழுகையில் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. கர்த்தருடைய பந்தியைக் குறித்து நமக்குப் போதிக்கிற சில முக்கியமான வசனப்பகுதிகள் யாவையெனில் **மத்தேயு 26 : 26–29 : லூக்கா 22 :14 – 20 : மற்றும் 1 கொரிந்தியர் 11 : 23–34.** கர்த்தருடைய பந்தியுடன் சம்பந்தப்பட்ட அநேகக் கருத்துகள் சொல்லப்பட்டுள்ளன.

(1) இது ஒரு நன்றி செலுத்துதலுக்குரியது. கர்த்தர் தமது பந்தியை ஸ்தாபிதம் செய்த போது, அவர் ஸ்தோத்திரஞ் செலுத்தினார். கிறிஸ்து தம்மையே நமக்காக பலியாக கொடுத்ததினால், மாபெரும் நன்றியுடன் இதில் பங்கு பெற வேண்டும்.

( 2 ) இது ஒரு நினைவுகூரும் பந்தி. நினைவு கூருதல் எனும் போது, ஏதோ ஒரு கடந்தகால நிகழ்ச்சிக்கு நமது மனதைக் கொண்டு செல்கிறது; இப்படி இந்த ஐக்கியப் பந்தியானது, நமது மனதை இயேசுவின் சிலுவையை நோக்கிப் பார்க்கச் செய்கிறது. **1 கொரிந்தியர் 11 : 25ல்** இயேசுவை நினைவுகூறும்படி இந்தப் பந்தியிலே நாம் பங்கு பெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது .

( 3 ) கர்த்தருடைய மரணத்தை நாம் தெரிவிக்கிறவர்களாக இதிலே பங்கு பெறுகிறோம். "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" **(1 கொரிந்தியர் 11 :26).** இப்படியாக, கர்த்தருடைய பந்தியும் ஒரு வகையில் பிரசங்கிப்பதுதான். நாம் கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறுவதை மற்றவர்கள் பார்க்கும் போது, இயேசுவின் மாபெரும் பலியில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை, நாம் நமது செயலால் அறிவிக்கிறோம்.

(4) நாம் ஒருவருக்கொருவர் அந்நியோந்நிய ஐக்கிய முள்ளவர்களாயிருக்கிறோம். **1 கொரிந்தியர் . 10:16,17** ஐ கவனியுங்கள். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்," என்று சொல்லப்படுகிறது. ஐக்கியம் என்பது அந்நியோந்நியம் என்று பொருள். இந்த வசனப்பகுதியில், விக்கிரகக்

கோவில்களில் புசிக்கிறவர்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்கிறார்கள். அதேப் போல, கர்த்தருடைய பந்தியை புசிப்பதனால் நாம், இயேசுவோடும் நம்மில் ஒவ்வொருவரோடும் ஐக்கியமாக இருக்கின்றோம், என்று பவுல் கூறுகிறார். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மற்றும் இயேசுவோடு கொண்டிருக்கும் பற்று மூலம், நாம் நமது ஐக்கியத்தைப் புரிந்து கொண்டு வலியுறுத்துகிறோம்.

## கர்த்தருடைய பந்தியின் பொருட்களும் அவைகளைக் குறித்த அர்த்தமும்

கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மிகவும் எளிமையானவை. மனுஷர்கள் பளபளப்பான வண்ண மற்றும் கருங்கல், (Granite), பொன் போன்ற நீடித்து நிலைக்கும் பொருட்களைக் கொண்டு நினைவுச் சின்னங்களை உண்டாக்குவார்கள். ஆனால் தேவன் அழிந்து போகிற தன்மையுடைய அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் நினைவுச் சின்னமாக ஏற்படுத்தினார். நம்முடைய இருதயங்களே இதற்கு பொருள் (அர்த்தம்) கொடுக்கின்றன. இயேசு புளிப்பில்லாத அப்பத்தைப் பயன்படுத்தினார் (**லூக்கா 22:1,8–9**). யூதர்கள் புளிப்பில்லாத அப்பத்தை தங்கள் பஸ்கா பண்டிகையில் பயன்படுத்தும்படி கட்டளையிடப்பட்டனர். எனவே அந்த பரிட்சயப்பட்ட பொருளையே எடுத்து அதற்கு புதியதொரு அர்த்தத்தைக் கொடுத்தார். இப்பொழுது அது இயேசுவின் மாம்ச சரீரத்தை நினைவுப் படுத்துகிறது. இந்த சரீரம் நமக்காக சிலுவையில் பலியாக்கப்பட்ட சரீரம். இயேசு திராட்ச ரசத்தையும் எடுத்தார் (**மத்தேயு 26:29**), திராட்ச ரசமாகிய அது, சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தை நினைவுபடுத்தக் கூடியதாயிருக்கிறது. **மத்தேயு 26ல்,** அப்பத்தைக் குறித்து சொன்னதாவது, "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது," (26:26). திராட்ச ரசத்தைக் குறித்து அவர், "இது புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (**மத்தேயு 26:28** ). என்று சொன்னார் இந்த வசனங்களின் அடிப்படையில், சிலர் தவறாகப் புரிந்து கொண்டு, அப்பமும் திராட்சை ரசமும் ஆசிர்வதிக்கப்படும் போது, அவை உண்மையாகவே இயேசுவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறது என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். அவை ஜெபம் பண்ணின பின்பும், பார்வைக்கு முன்பு போல காணுகிறது; முன்பிருந்த ருசியே இருக்கிறது. உலகப் பொருளாகவே முன்பு இருந்தது போன்று இருக்கிறது. எனவே அவர்கள் சொல்லுகிற அர்த்தம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படுவதில்லை. இயேசு எளிமையான வார்த்தைகளில், அவைகள் தமது இரத்தத்தையும் சரீரத்தையும் நினைவுபடுத்தும் பொருள்களாகக் குறிப்பிடுகிறது என்று சொன்னார்.

**யோவான் 10 : 9ல்** இயேசு, "நானே வாசல்" என்று சொன்னார். இயேசு இங்கே, தாம் நேரடிப் பொருளின் வாசல் என்று குறிப்பிடவில்லை. இரண்டு வசனங்கள் கழித்து, அவர் நல்ல மேய்ப்பனாகத் தம்மைக் குறிப்பிட்டார். மாம்ச ரீதியிலான, ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பனாக இயேசு ஒரு போதும் இருந்ததுமில்லை. இப்பொழுதும் இருக்கவில்லை. ஆனால் ஆவிக்குரிய வகையில், ஆத்துமாக்களுக்கு பிரதான மேய்ப்பராக அவர் இருக்கிறார் ( **1 பேதுரு 5 : 4** )**.** இயேசு வாசலைப்போல அல்லது ஒரு மேய்ப்பனைப் போல இருக்கிறார். அதேப் போல, கர்த்தருடைய பந்தியின் பொருட்கள், இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் அடையாளப்படுத்துகின்றன.

**1 கொரிந்தியர் 11:24, 25ல்,** கர்த்தருடைய பந்தியைத் தமது சீஷர்களுக்கு ஸ்தாபிதம் செய்த அந்த ராத்திரியில், இயேசு சொன்ன வார்த்தைகளை கொரிந்தியர்களுக்கு பவுல் நினைவுபடுத்துகிறார். இயேசு தமது சீஷர்களிடம், "என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்" என்று சொன்னார். இயேசு கர்த்தருடைய பந்தியை நிறுவினபடியால், அது முக்கியமானதுதான். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை நினைவு கூறும்படி, சபை ஸ்தாபிக்கப்பட்டு அநேக ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சபையின் சடங்காச்சாரமாக இது கொண்டுவரப்பட்டதல்ல! இது இயேசுவால் கொடுக்கப்பட்டது, மற்றும் சபையின் தோற்றம் முதலே விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களால் அநுசரிக்கப்பட்டு வந்த ஒன்று. கிறிஸ்து நமக்காகப் பலியானதை நினைவு கூறும் பொருட்டு நாம் இதிலே பங்கு பெறுகிறோம். ஆகிலும், இதை நாம் துக்கங்கொண்டாடும்ஒரு நேரமாக அனுசரிக்கக்கூடாது. இது மிக வினயமாக அனுசரிக்க வேண்டும் என்பது உண்மைதான். இருப்பினும், **1 கொரிந்தியர் 10 : 16 ல்,** இது ஆசீர்வாதத்தின் பாத்திரம் என்று சொல்லப்படுகிறது. நமக்கு, இயேசுவின் மரணம் ஒரு மிகப் பெரிய சோகக் காட்சியல்ல. மாறாக, இது மிகப்பெரிய ஈவு. நாம் ஒரு போதும் பெற இயலாத மாபெரும் ஆசீர்வாதம்!

## எப்பொழுது நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் ?

வெவ்வேறு சபைகளில், பல்வேறுபட்ட வேளைகளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகின்றனர். சிலர் மாதத்திற்கு ஒரு முறை பங்கு பெறுகின்றனர். சிலர் மூன்று மாதத்திற்கு ஒருமுறையோ, அல்லது குறிப்பிட்ட சில விசேஷித்த நிகழ்ச்சியின் போதோ பங்கு பெறுகின்றனர்; சில சபைகளில் வாரத்திற்கு ஒரு முறையும் பங்கு பெறப்படுகிறது. நாம் எப்பொழுது பங்குபெற வேண்டுமென்ற குறிப்புக் கட்டளை எதுவும், நமக்கு வேதாகமத்தில் கொடுக்கப்படவில்லை என்று ஜனங்கள் அடிக்கடி

சொல்லுவதுண்டு. எப்பொழுதெல்லாம் நாம் பங்குபெற வேண்டும் என்று குறிப்பாக கொடுக்கப்படவில்லை என்பது உண்மைதான்; ஆனால், ஒரு குறிப்பிட்ட வேளை (வேதத்தில்) இல்லாதிருந்தால், பிறகு ஒருவர் தன் வாழ்நாளிலேயே ஒரே ஒருமுறை பங்கு பெற்றாலும், அதுவும் வசன ரீதியிலாகி விடும்.

ஆதிசபையின் உதாரணத்தைக் கொண்டு, சபை கூடிவருதலின் நோக்கங்களில் முக்கியமானது, ஐக்கிய விருந்து அல்லது "அப்பம் பிட்குதல்" என்று காண்கிறோம், **அப்போஸ்தலர் 20:7ல்** நாம் வாசிக்கிறதாவது," "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் .......... நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்." சபையானது பவுல் பிரசங்கிப்பதை மட்டும் கேட்கும்படி கூடி வராமல், அப்பம் பிட்கும்படி, அதாவது கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்படி கூடிவந்திருந்தார்கள். ஆதிகால கிறிஸ்தவ எழுத்துக்களிலும் கூட (வரலாற்று புத்தகங்கள்) சபை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவந்து ஐக்கிய விருந்திலே பங்கு பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. **1 கொரிந்தியர் 11:20ல்** கொரிந்துவிலிருந்த சபை கர்த்தருடைய பந்தியைப் புசிக்கும்படி கூடிவந்ததாகக் காண்கிறோம். கூடி வரும்படி கட்டளையிடப்பட்ட நேரம் வாரத்தின் முதல்நாள். நாம் வாரத்தின் முதல் நாளிலே கூடி வருகிறோம். எனவே ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும், நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும்.

'இதிலே அடிக்கடி பங்கு பெறுவதால், இதன் அர்த்தத்தை (வினயத்தை) அது எடுத்துப்போட்டு விடுகிறது. அத்துடன், ஒரு சடங்காச்சாரமாக ஒருவர் அதிலே பங்கு பெறுகிறார்' என்று சிலர் வாதிடுகின்றனர். அது சாத்தியமே! ஆனாலும், தொழுகையின் அனைத்து செயல்பாடுகளும் அது போலவே சடங்காச்சாரமாக மாற வாய்ப்புள்ளது. ஆனால், எவரும் எப்பொழுதாவது தொழுகை செய்து கொள்ளலாம் என யாரும் வாதிடுவதில்லை. இந்தப் பிரச்னையைக் குறித்து பவுல் **1 கொரிந்தியர் 11:28, 29ல்** போதிக்கிறார். "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்." இந்த வசனங்கள் பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது, ஜனங்கள் ஒவ்வொரு வாரத்திலும், தாங்கள் தகுதியானவர்களா இல்லையா? கடந்த வாரத்தில் எப்படிப்பட்ட பரிசுத்த வாழ்க்கையை வாழ்ந்தார்கள்? என எண்ணி முடிவெடுக்க வேண்டும் என எண்ணுகின்றனர். அபாத்திரமாய் எனும் வார்த்தை ஒரு வினையடைச் சொல். இது பந்தியில் பங்கு பெறும் விதத்தில் ஒரு சிறு

மாற்றத்தை எதிர்பார்க்கும் சொல். நாம் நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்கள்; அதாவது, நமக்காக செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவில் கொண்டு வரவேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இது மிகவும் வினயமான (முக்கியமான) விஷயம். ஏனெனில், நாம் எந்தவித நினைவு கூருதலுமில்லாமல் பங்கு பெறுவோமாகில், நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரவழைத்துக் கொள்ளத் தக்கதாக பானம் பண்ணுகிறோம். ஏதோ ஒரு ஆசீர்வாதத்தை மட்டும் நாம் இழப்பதில்லை; நாம் பாவம் செய்து விட்டோம்!

## யார் இதிலே பங்கு பெறுவது ?

சில நேரங்களில் கேட்கப்படும் கேள்வி, "கிறிஸ்தவர்களல்லாதோர் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறலாமா?" இது தேவனோடும் இயேசுவோடும் கொள்ளுகிற ஐக்கிய விருந்து. இயேசு நம்மோடு கூட தமது ராஜ்யத்திலே பங்கு பெறுகிறார். ராஜ்யம் என்பது சபையாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம்; இப்படியாக, இது கிறிஸ்துவின் ராஜ்யத்துக்குட்பட்ட அங்கத்தினர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் ஒரு ஆசீர்வாதம்! சில சகோதரர்கள், யார் இதிலே பங்கு பெற வேண்டும் என்ற வரைமுறையைக் கொண்டுள்ளனர். அதினால், அவர்கள் யாரை கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பதாக நினைக்கிறார்களோ, அவர்களை பங்குபெற அனுமதிப்பதில்லை. இந்தச் செயல் நம்மை நாமே நியாயந்தீர்ப்பவர்களாக அமர்த்திக் கொள்கிறோம்; மேலும் நாம் நியாயந்தீர்க்க முடியாது! ஒரு மனிதனுடைய மனநிலையை நாம் அறியோம். இது கர்த்தருடைய பந்தி, என்னுடைய பந்தியோ அல்லது சபையின் பந்தியோ அல்ல. இது ஒரு ஐக்கிய விருந்து. ஒருவர் கிறிஸ்துவுடன் ஐக்கியமுள்ளவராயிராதிருந்தால், அவர் (ஆத்துமாவை) இழந்தவராயிருக்கிறார். எனவே கிறிஸ்துவுடன் அவருக்கு ஐக்கியமில்லை. அவர் செய்வதெல்லாம் கொஞ்சம் ரசத்தையும் கொஞ்சம் அப்பத்தையும் புசிக்கிறார். அவ்வளவுதான்! அவருடைய ஆத்துமாவை அவர் ஏற்கனவே இழந்தவரானபடியால், சிறப்பானதோ அல்லது மோசமானதோ அல்ல. நாம் நம்மைக்குறித்தும் தேவனுடன் நமக்கிருக்கும் உறவுமுறை குறித்தும் தியானிக்கவும்; பங்கு பெறும்போது மனதை ஒருமுகப்படுத்தியிருக்கவும் வேண்டுமேயன்றி, மற்றவர்களை நியாயந்தீர்க்கக் கூடாது!

# 5. பாடுதல்

தொழுகையின் அனைத்து செயல்களும் ஒரு கிறிஸ்தவனுக்கு மனமகிழ் அனுபவமாயிருக்கும்; ஆனால் பெரும்பாலான ஜனங்களுக்கு, மிகவும் ரசித்து அனுபவிக்கும் செயல் ஒன்று இருக்குமானால், அது பாடுவதாகத்தானிருக்கும். அநேக நேரங்களில் ஜனங்கள், வாய்த்திறவாமல், ராகம் எழுப்பியோ அல்லது பாடியோ தங்களுக்குத் தாங்களே கேட்கும்படி குரல் எழுப்புவர்; அது சப்தமாகவோ அமைதியாகவோதான் இருக்கும். பாடுதல் என்பது கிறிஸ்தவத் தொழுகையில் ஒரு முக்கியமான பகுதி; இருந்தாலும் இது மிகவும் முரண்பாடானது. ஆகவே இதை சரியாக புரிந்து கொள்ள உங்கள் மனதை திறவுங்கள்; இப்பொழுது இப்பாடத்தை படிக்கையில் எளிமையான முறையில் தேவன், வேதவாக்கியங்கள் மூலம் உங்களிடம் பேச விடுங்கள்.

புதிய ஏற்பாட்டில் பாடுவதைக் குறித்துப் பேசுகிற சிறப்பு மிக்க இரண்டு வசனங்கள், **எபேசியர் 5:19** மற்றும் **கொலோசெயர் 3:16,17.** அவைகள் இரண்டும் ஒரே மாதிரியான கருத்துத் தோற்றமுடையவை. "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, **(எபேசியர் 5:19).** "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொள்ள உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி," **(கொலோ செயர் 3:16–17).**

## பாடுதலின் நோக்கம்

பாடுதல் போதிக்கும் வழிகளில் ஒன்று நாம் பாடுகிற பாடல்களில் உள்ள வார்த்தைகளால் நாம் ஒருவருக்கொருவர் போதித்துக் கொள்கிறோம். வார்த்தைகள் மட்டுமே போதிக்கும் ; ஆகையால் வார்த்தைகள் பாடப்படுவது 'தெளிவாகப் புரிந்து

கொள்ளப்படுதலை' உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் , அவை வசனரீதியான போதனைகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். கள்ளப் போதகத்தை ஒருவருக்குப் போதிப்பது தவறு என்பது போலவே, அவைகளைப் பாடுவதும் தவறாகி விடும். வழக்கமாக நாம், இசைக்குப் வடிவில் போதனைகளை கொண்டு வந்தால், அது எளிதாயிருக்கும். பிள்ளைகளுக்குப் போதிப்பதில் எளிமையான வழிகளில் ஒன்று, அவர்களுக்குப் பாடல்களைப் போதிப்பது. அவர்கள் எளிதாகக் கற்றுக் கொள்ளவும் இயலும்; அது அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் நேரமாகவும் இருக்கக்கூடும். இப்படியாகப் பாடுதல் என்பது ஒரு மேன்மையான போதனை முறையாகிறது. அதில் வரும் ராகம் இரண்டாம் பட்சமானது; ஏனெனில், வார்த்தைகள் மட்டுமே போதிக்கவும் பக்திவிருத்தி அடையவும் செய்கிறது. நாம் ஆவிக்குரிய பாடல்களைப் பாட வேண்டியவர்கள்; நாம் விரும்புவதையோ, நமக்கு நல்லதாக தோன்றுவதையோ பாடலாக பாடக் கூடாது! அல்ல! சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுக்களுக்கு இடையேயான வித்தியாசங்களைக் குறித்து ஜனங்கள் கேட்பதுண்டு. இந்த வார்த்தைகள் பெரும்பாலும் மாறி மாறிப் பயன்படுத்தப்படுகிறது; ஆகையால், அவைகளை வித்தியாசப்படுத்தி பாடல்களின் வகையைக் காண எந்த ஒரு முயற்சியும் தேவையற்றது.

நாம் ஒருவருக்கொருவர் பாடல் மூலம் போதிக்கிறோம் என்பது, நமது தொழுகையில் பரஸ்பரம் நாம் தொடர்புடையவர்கள் என்பதை வலியுறுத்துகிறது. இதன் விளைவு நாம் ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்குகிறோம். பாடலைக் காட்டிலும் மிக முக்கியமான வேத வசனக்கொள்கைகளை வலியுறுத்தி ஒருவரை ஊக்கப்படுத்த சில காரியங்களே உண்டு. 'நாம் ஒருவருக்கொருவர் போதிப்பது, என்பது பாடலில் முழு சபையாரையும் உட்படுத்துகிறது. ஆதலால் பாடல் குழு, அல்லது வேறு சில குழுக்களாக அமைத்துப் பாடுவது, ஒரு சிலர் மட்டுமே பாடவும் மற்றவர்கள் கவனித்துக் கொண்டும் இருப்பது போன்றவை ஒருவருக்கொருவர் போதித்தலாகாது. பாடுதல் மட்டுமே, தொழுகையில் முழு சபையும் பங்கேற்று, ஒரே

மாதிரியான குரலிசையை எழும்பப் பண்ணுகிறது.

பாடுதல் ஒரு ஆவிக்குரிய பலி. "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" **(எபிரேயர் 13: 15).** இந்த வசனம் பழைய ஏற்பாட்டு பலி செலுத்தும் முறையைக் குறிப்பிட்டு, பாடுதல் என்பது நம்முடைய ஆவிக்குரிய ரீதியில், சரீரப் பிரகாரமான பலிக்கு மாறுதலாகக் குறிப்பிடப்படுகிறது. நம்முடைய பாடல்கள் மூலம் தேவனுடைய அற்புதமான கிரியைகளுக்காகவும், அதேபோல அவருடைய மாபெரும் ஆசீர்வாதங்களுக்காகவும் துதித்துப் பாடுகிறோம். இப்படியாக, நாம் பாடுதல் மூலம் தேவனோடு தொடர்பு கொள்கிறோம் என்பதை நினைவில் கொள்வோமாக. பாடுதல் நம்முடைய முழு நபரையும் உட்படுத்துகிறது; ஆவி, மனம், இருதயம், உதடுகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகிறது. **எபேசியர் 5 : 19.** நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ண வேண்டுமென கட்டளையிடுகிறது. நாம் பாடும்போது, பாடலில் வரும் செய்தியுடன் கலந்து வரும் இசையாக, நம்முடைய மனதிலிருந்தும் இருதயத்திலிருந்தும் தோன்ற வேண்டும்; அப்படியிராதபட்சத்தில் நமது பாடல்களை பாடுவதெல்லாம் வெறும் சடங்காச்சாரமாகவே இருக்கும். வெறுமையான சடங்காச்சாரங்களில் ஒருபோதும் தேவன் பிரியப்படுவதில்லை.

பாடுதல் சபையின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது. **ரோமர் 15:6ல்,** பவுல் ரோமக் கிறிஸ்தவர்களிடம், "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய பிதாவாகிய தேவனை ஒரே வாயினாலே மகிமைப்படுத்தும்படி" என்று மன்றாடுகிறார். புதிய ஏற்பாட்டில் ஏழு வசனப்பகுதிகள் சபையின் ஒற்றுமையை வலியுறுத்துகின்றன; ஆனாலும் பாடுதலே நெருக்கமான உறவை ஒருவரிலொருவர் ஏற்படுத்தும் ஒரு வழியாக இருக்கிறது. அதிலும் முக்கியமாக, தேவனுக்கு ஒருவர் செய்யும் தொழுகை நம்முடைய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒற்றுமையில்லாமல் செய்யப்பட்டால் பாதிப்பையே ஏற்படுத்தும்.

ஒற்றுமையுடன் கூடி கிறிஸ்தவர்கள் பாடும் பாடல்கள், ஒரே வாயிலிருந்து வருவது போல் இருக்குமாகில், சில காரியங்கள் இன்னும் அதிகமாய் மேம்பாடு அடையும்.

## தேவன் எப்படி அங்கீகரிக்கிறார்?

நாம் எப்படி நம்முடைய செயல்களுக்கு, விசேஷமாக நம்முடைய தொழுகைக்கு அதிகாரத்தை பெறுகிறோம் என்பது குறித்து அநேகர் தப்பான புரிந்து கொள்ளுதலைக் கொண்டுள்ளனர். கட்டளைகளில் இரு வகையுண்டு : பொதுவான கட்டளைகள், குறிப்புக் கட்டளைகள். ஒரு 'பொதுவான கட்டளை' என்பது ஒரு செயலின் முறை எப்படி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லாமல் கட்டளையிடுதல் ஆகும். மற்றொருபுறம், 'குறிப்புக் கட்டளை' என்பது ஒரு செயலை எப்படி செய்ய வேண்டுமென குறிப்பிட்டுச் சொல்லுதல். பொதுவாகக் காணும் சில உதாரணங்களைப் பாருங்கள்: 'புறப்பட்டுப் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்று தேவன் நமக்கு கட்டளையிடுகிறார். இப்படிபட்ட கட்டளை என்பது பொதுக்கட்டளை ஆகும்! ஏனெனில், போகும் விதம் பற்றியோ போதிக்கும் முறை குறித்தோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், 'கொப்பேரு' மரத்தால் பேழையை உண்டு பண்ணும்படி நோவாவுக்குச் சொல்லப்பட்டது; இப்படிப்பட்ட கட்டளை என்பதுபயன்படுத்த வேண்டிய மரம் குறிப்பாகச் சொல்லப்பட்டது. இதினால் வேறுவகை மரத்தைப் பயன்படுத்த தடையிருந்தது. இசை என்பதும் எல்லாவகை இசைகளையும் உட்படுத்தியது. தேவன் இசைகளை எழுப்பு என்று சொல்லியிருப்பாரானால், அது, கிறிஸ்தவர்கள் எந்த வகை இசையையும் பயன்படுத்த தெரிவு செய்து கொள்ளலாம். எப்படியிருப்பினும், தேவன் பாடுதலை (குரலிசை) மட்டும் குறிப்பாகச் சொன்னார்; இது மற்ற எல்லா வகையான இசைகளையும் இயல்பாகப் புறந்தள்ளுகிறது. இப்படியாக இசைக்கருவிகள் தவிர்க்கப்படுகிறது. இசைக்கருவி பயன்படுத்துவதை தேவன் குறிப்பாகச் சொல்லவில்லை என்றாலும், இதுதான் உண்மை.

## வரலாற்றில் இசைக்கருவி

பெரும்பாலான மதக்கூட்டங்கள் தங்களுடைய பாடலுடன் இசைக்கருவியைப் பயன்படுத்துகின்றனர். இது பொதுவான ஒரு வழக்கமாகிப் போனதால், இது சரிதானா என்ற கேள்வியை வெகு சிலரே எழுப்புகின்றனர். ஆகிலும் எல்லா காலமும் இசைக் கருவி பயன்படுத்தப்பட்டதில்லை. கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மட்டுமே இசைக் கருவி பயன்படுத்துதல் மிகவும் பரவலாக, கேள்வியெழுப்பாமல் பயன்படுத்தப்படுகிறது. தொழுகையில் இசைக் கருவி பயன்படுத்தச் சொல்லப்படாததால், புதிய ஏற்பாட்டில் பாடும்படியாக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. இரண்டு வகையான இசைகள் உள்ளன. 'குரல் இசை' மற்றும் 'கருவி இசை.' தொழுகை என்பது ஆவிக்குரியதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது; பவுல் இசைக் கருவியை வாசிப்பதைச் சொல்லவில்லை; ஆனால், இருதயத்தையே இசைக் கருவியாகப் பயன்படுத்தச் சொல்லுகிறார்.

**கொலோசெயர் 3:17 ல்** மனுஷர்கள் எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்தினாலே, அதாவது இயேசுவின் அதிகாரத்தின் பேரில் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறது. அதிகாரமளிக்கப்படாத இசைக்கருவியோடு நாம் எப்படி, இயேசுவின் அதிகாரத்தில் பாட முடியும்? இசைக் கருவி பயன்பாட்டைக் குறித்து வசனங்கள் முற்றிலும் அமைதியாக உள்ளது; எனவே, இந்த பயன்பாட்டை வசனங்கள் கண்டனம் பண்ணாததால், அவைகளைப் பயன்படுத்துவது ஒரு பரிபூரணப்பட்ட சம்மதமே என்று அநேகர் நினைக்கின்றனர், பயன்படுத்துகின்றனர். ஆகிலும் அமைதியாக இருப்பது அதிகாரமளிப்பதல்ல. எபிரேயர் புத்தகத்தில் இதற்கான இரண்டு உதாரணங்களைக் காண்கிறோம்; **எபிரேயர் 1:4,5ல்** எழுத்தாளர், கிறிஸ்துவின் மேன்மையை தேவதூதர்களுக்கு மேலாகக் காண முற்படுகிறார். அப்படிச் செய்வதற்கு, "நீர் என்னுடைய குமாரன் என்று தேவதூதர்களில் யாருக்காகிலும் எப்பொழுதாகிலும் சொன்னதுண்டா?" என்று எழுத்தாளர் கேட்கிறார். அதற்கான பதில், ஒருவரிடத்திலும் சொல்லப்படவில்லை என்பது தான். ஆகையால், கிறிஸ்து தேவ

தூதர்களைக் காட்டிலும் மேலானவர். **எபிரேயர் 7:13,14ல்** எழுத்தாளர், ஒரு புதிய ஆசாரித்துவத்தின் அவசியத்தைக் காண முற்படுகிறார். இயேசு ஆசாரியனாக இருக்க வேண்டுமானால், ஒரு புதிய பிரமாணம் நிலவரப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் பழைய பிரமாணத்தில் யூதா கோத்திரத்திலிருந்து ஒரு ஆசாரியன் வரவேண்டுமென்று சொல்லவில்லை.

மாறாக, அனைத்து ஆசாரியர்களும் லேவி கோத்திரத்திலிருந்தே வரவேண்டும் என்று நியாயப்பிரமாணம் குறிப்பாகச் சொல்லுகிறது. லேவிக் கோத்திரம் மட்டும் குறிப்பாகச் சொல்லப்படுவதால், அது இயல்பாகவே பிற கோத்திரங்களைப் புறம்பாக்குகிறது. இப்படியாக, கிறிஸ்து மோசேயின் பிரமாணத்தின்படி ஆசாரியனாக இருக்க முடியாது. ஏனெனில், அவர் லேவிக் கோத்திரத்தில் வரவில்லை. அதே போல்தான், பாடுதல் என்பதும் குறிப்பான அதிகாரமாக அளிக்கப்பட்டுள்ளது; மற்ற எந்த வித இசையும் இதினால் புறம்பாக்கப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் சொன்னால், வாத்திய இசைக் கருவியைப் பயன்படுத்த எந்த வித அதிகாரமும் அளிக்கப்படவில்லை.

கிறிஸ்தவத்தின் வரலாற்று முழுவதிலும், கருவி இசை எதிரிக்கப்பட்டே வந்துள்ளது. சபையின் ஆதிபிதாக்கள் தொழுகையிலே இசைக் கருவிகளை கூடுதலாக்குவதை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்துள்ளனர். அநேக நூற்றாண்டுகள் வரை எந்த சபையிலும் இசைக் கருவி பயன்படுத்தப்படவில்லை. முதல் முறையாக 7ம் நூற்றாண்டின் பின்பகுதியில் ஆர்மோனியம் அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. யூதர்கள் தங்கள் தேவாலயங்களிலும், கிரேக்கர் தங்கள் விக்கிரக வணக்கத்திலும் பயன்படுத்தியிருக்கின்றனர். ஆகையால், ஆதிக் கிறிஸ்தவர்கள் நிச்சயமாக இசைக் கருவிகளின் பயன்பாடுகளில் பரிட்சயமுள்ளவர்களாகவும், அதிலே திருப்தி பெறுகிறவர்களாகவும் இருந்திருக்கக் கூடும்; இருந்த போதிலும், அது நடைமுறையில் ஒவ்வொருவராலும் ஏற்புடையதாயிருந்தும், ஆதிசபையிலே எந்தவித இசைக் கருவியும் அவர்களுடைய

பக்திக்குரிய தொழுகைகளிலே பயன்படுத்தவில்லை.

கூடுதலாக, இன்றைக்குக் நாம் காணும் பிரிவுக் கூட்டத்தின் ஸ்தாபகர்களில் அநேகரும் கூட, இசைக் கருவிப் பயன்பாட்டை எதிர்த்துள்ளனர். அவர்களுடைய பேச்சுகளில் காணப்பட்ட சில மேற்கோள்களைக் கவனியுங்கள்:

+ **மார்டீன் லூத்தர்:** தொழுகையில் ஆர்மோனியத்தைப் பயன்படுத்துவது பாகால் வணக்கத்தின் அறிகுறி.

+ **ஜான் கால்வின்:** இந்த இசைக் கருவி பயன்படுத்தும் வழக்கம், தூபவர்க்கங்களைக் காட்டுவதைக் காட்டிலும் பொருத்தமான (ஏற்புடைய) செயலல்ல; அதேப்போல மெழுகுவர்த்தி ஏற்றுவது, அல்லது வேறு நியாயப்பிரமாணத்தின் சில நிழல்களை புதிப்பிப்பதைக் காட்டிலும் வித்தியாசமானதல்ல; ரோமன் கத்தோலிக்கர்கள் யூதர்களிடமிருந்து இவைகளை இரவல் வாங்கினார்கள்.

+ **ஜான் வெஸ்லி :** நான் கேள்விப்பட்டிராத (விரும்பாத) கூட இராத தொழுகையில், ஆர்மோனியம் (அல்லது, கருவி இசை) அனுமதிக்கப்பட்டால், எனக்கு எந்த வித ஆட்சேபனையுமில்லை.

+ **ஜான் க்னாக்ஸ் :** ஆர்மோனியத்தை ஒரு குரல் வளையத்தின் விசில்கள் என்றழைத்தார்.

புதிய ஏற்பாட்டு வேதாகம சபையானது எப்பொழுதுமே இசைக்கருவியை தொழுகையிலே பயன்படுத்தியதில்லை; மேலும் அப்படிப்பட்ட செயலை வெகுவாக எதிர்த்துள்ளது. நம்முடைய நோக்கம் , அப்படிப்பட்ட புதிய ஏற்பாட்டு சபையை மீட்டமைப்பதே! ஆகையினால், ஒருவரும் எளிமையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்வராக இருக்க விரும்புவரானால், அவர் 'கருவி இசை' இல்லாமலே தொழுதுகொள்ளுவார்.

# 6. பரிசுத்தவான்களின் காணிக்கை (அல்லது) கொடுத்தல்

கொடுத்தல் அல்லது காணிக்கை செலுத்துதல் என்பது கிறிஸ்தவனுக்கு ஒரு முக்கியமான ஆசீர்வாதமும், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடமையுமாகும். மாற்கு **12:41–44** ல் கொடுப்பதைப் பற்றிய ஒரு மிகச்சிறந்த உதாரணத்தை நாம் காண்கிறோம். தேவாலயத்து காணிக்கை பெட்டிக்குள் ஜனங்கள் காணிக்கை போடுவதை இயேசு கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு விதவை ஏழைப் பெண், இரண்டு காசுகளை காணிக்கையாகச் செலுத்தினாள். அந்த நேரத்தில் அது மிக அற்பமாகக் கருதப்பட்டு, புழக்கத்திலிருந்த பணம். இன்றைக்கு உள்ள பணத்துடன் ஒப்பிட்டால் அது மதிப்புடையதுதான்; ஆகிலும் அப்போது இது ஏறத்தாழ ஒன்றுமில்லை எனலாம். இருந்தும், இந்த விதவைதான் மற்றெல்லாரையும் காட்டிலும் அதிகமாகக் கொடுத்தாள் என்று இயேசு சொன்னார்; ஏனெனில் இவர்கள் எல்லோரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து போட்டார்கள், இவளோ தனக்கிருந்த எல்லாவற்றையும் போட்டு விட்டாள், என்றார்.

## கொடுப்பதற்கான மனப்பாங்கு

மனப்பாங்கு எப்பொழுதுமே தேவனுக்கு மிகவும் முக்கியமானது. முதலாவதாக, கொடுப்பதில் இருக்கிற சில தவறான மனப்பான்மையைக் காண்போம். நாம், வெறும் கடமைக்காக மட்டும் கொடுக்கிற மனப்பான்மையுள்ளவர்களாக இருத்தல் கூடாது; அல்லது பெருமைக்காகவோ, மனுஷருடைய புகழுக்காகவோ, அல்லது கொடுக்க வேண்டுமே என்ற மன உறுத்துதலிலிருந்து விடுபடவோ கொடுக்கக் கூடாது. ஏதோ கொஞ்சம் பணத்தைக் கொடுப்பது, ஒருவர் தனிப்பட்ட முறையில் தேவனுக்கு செய்ய வேண்டியதை எல்லாம் நிறைவேற்றிவிடாது. தேவனுக்கு ஊழியஞ் செய்யும்படி தனக்காக இன்னொருவரை ஒருவர் நியமிக்க இயலாது.

கொடுத்தல் என்பது விசுவாசத்தின் பிரதான செயல்; இது கிறிஸ்தவனின் பகுதியில் தேவனிடத்தில் அன்பு கூருவதும், அவருக்குச் செலுத்தும் வழிபாடுமாகும். நம்முடைய கொடுத்தல் மூலம் தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பை நிரூபிக்கிறோம். நாம் கொடுப்பதன் மூலம் வளருகிறோம். நாம் தரும சிந்தையுள்ளவர்களாயிருப்பதன் மூலம் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்கிறோம். மேலும் நாம் கொடுப்பதினால், தேவனுடைய

ஆசீர்வாதத்திற்கான வழி நமக்குத் திறக்கப்படுகிறது. இறுதியாக, தேவனுடைய சபையாகிய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக நாம் கொடுக்கிறோம். சபையின் பல்வேறுபட்ட தேவைகளை சந்திப்பதற்காகவும், ராஜ்யத்திற்கு ஆதாரமாயிருக்கும்படியாகவும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்திருக்கிற திட்டம் இது.

**1 கொரிந்தியர் 16:1-2**

"பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கு பண்ணிய திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன்"

இந்த வசனங்களில் நாம் கொடுக்கும்படிக்கு நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாக, அல்லது பரிசுத்தவான்களுக்காக சேர்த்து வைக்கும்படியாக நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகக் காணுகிறோம். சபை கூடிவருகிற வாரத்தின் முதல் நாளிலே நாம் கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டிருப்பதால், எதையாகிலும் சேர்த்து வைக்குதல் என்பது வீட்டிலே அல்ல, சபையிலே என்று குறிப்பிடப்படுகிறது.

- இது தனிப்பட்ட கட்டளை. ஒவ்வொருவரும் பங்குபெற வேண்டும்; மாறாக பணக்காரர்களோ, வயதானவர்களோ, கொஞ்சம் கடனுள்ளவர்களோ மட்டும் அல்ல.

- நாம் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும். பெரும்பாலும் இது பணத்தைக் குறித்து மட்டுமே பேசுவதாக நாம் நினைக்கிறோம். ஆனால் இது வேறு சிலவற்றையும் உள்ளடக்கியது. அது ஒருவர் எதை உடையவராக இருக்கிறாரோ அதைப் பொறுத்தே கொடுக்க வேண்டும். ஒருவரிடம் கொஞ்சம் பணம் மட்டுமே இருப்பதால், அவர் கொடுக்க இயலாது என்று பொருளல்ல.

- நாம் அவரவர் வரவுக்குத்தக்கதாகக் கொடுக்க வேண்டும். தேவன் ஒரு குறிப்பிட்டத் தொகையை நாம் கொடுக்க வேண்டும் என்று நியமம் செய்யவில்லை. யூதர்கள் பத்தில் ஒரு பங்கு(தசமபாகம்) செலுத்தும்படி கட்டளையிடப்பட்டனர். ஆனால் அவர்கள் செலுத்தின பலிகளும், வேறு பொருட்களும், உண்மையில் அதற்கு மேல் இருந்திருக்கக் கூடும். மேலான

பிரமாணத்தைக் கொடுத்த மேலான இரட்சகருக்கு நாம் குறைவாகக் கொடுக்கலாமா? இதில் முக்கியமானது என்னவெனில், நம்மை நாம் வேறு யாரோடும் ஒப்பிட இயலாது. கொடுத்தல் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விஷயம், எனவே நம்மைக் காட்டிலும் மிகவும் குறைவாகக் கொடுப்பவர்களோடு நம்மை ஒப்பிட்டு பார்த்து நியாயப்படுத்தக் கூடாது.

- இதில் தவிர்க்கப்பட வேண்டிய விஷயம் உண்டு. பவுல் வரும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு இவர்கள் தங்களிடத்தில் எதையாகிலும் சேர்த்து வைக்கக்கடவர்கள் என்று சொல்லப்பட்டது. இது பவுல் விரைவில் அவர்களிடத்தில் வருவார் என்பதைக் குறிப்பிடுகிறது. பவுல் வரும்போது அவர்கள் தங்கள் காணிக்கைகளை ஆயத்தமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது. இதன் மூலம், தேவை ஏற்படும் போது சபையிலே காணிக்கை எடுப்பதை விடுத்து, தேவை ஏற்படுவதற்கு முன்பாகவே தேவையான பணத்தை ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்று காட்டப்படுகிறது.

**2 கொரிந்தியர் 9:5–7**

"ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தான தருமமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரர்களை ஏவி, உங்களிடத்தில் முன்னாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது. பின்னும் நான சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."

- நாம் உற்சாகமாயும் மனவிருப்பத்தோடும் கொடுக்க வேண்டும். நாம் கொடுத்தாக வேண்டுமே என்பதற்காகக் கொடுப்போமாகில், தேவன் பிரியப்பட மாட்டார். நாம் அன்பின் சுபாவத்தோடு கொடுக்க வேண்டுமேயன்றி கட்டாயமாக அல்ல. கொடுத்தல் லோபத்தனத்தோடோ, இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டோ, கட்டாயத்தின் பேரில் கொடுப்பதாக இருக்கக் கூடாது. சில சபைகளில் தங்களுடைய அங்கத்தினர்களை கட்டாயப்படுத்தி எதையாவது அடமானம் கூட வைக்கச்செய்து பணத்தைப் பெற்றுக் கொண்டோ, அல்லது அவர்களே எதையாவது அடமானம் வைத்துவிட்டு, அடமானம் வைத்த ரசீதைக்

கொடுத்து அதற்கான பணத்தைக் கட்ட வைப்பார்கள். இது உற்சாகமாய்க் கொடுக்கிற மனப்பாங்கை அப்புறப்படுத்தி, அவர்கள் கட்டாயமாய்க் கொடுக்கும் சூழலை ஏற்படுத்துகிறது.

- நம்முடைய இருதயத்திலே நிர்ணயித்தபடி நாம் கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கப்போகிறோம் என்பதை முன்னதாகவே மனப்பூர்வமான முடிவெடுத்து கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு கொடுக்கப் போவதை தீர்மானித்து வைத்துக் கொண்டு மீதியை செலவிட வேண்டும்.

- இந்த வசனப்பகுதி கொடுக்கக் கூடிய மன உற்சாகத்தையும் கொடுக்கிறது. நாம் ஏன் கட்டாயமாகக் கொடுக்கக்கூடாது என்பதற்கான பிரதான காரணம், நாம் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாக தேவன் கொடுப்பதாகச் செய்துள்ள வாக்குத் தத்தம்தான். நாம் இச்சையோடே கொடுக்கக் கூடாது. அதாவது இன்னும் அதிகமாய்ப் பெற்றுக்கொள்வோம் என்ற பேராசையுடன் கொடுத்தல் கூடாது; இருப்பினும், நாம் கொடுப்பதைப் பொறுத்து தேவன் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். சிலர், விசேஷமாக தொலைக்காட்சியில் பிரசங்கிப்பவர்கள், 'மக்கள் கொடுப்பதன்மூலம் அதிகமாய்ப் பெற்றுக்கொள்வார்கள்' என்ற ஆசையைத் தூண்டுவது போல இந்த வசனப் பகுதியைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் அப்படிப் பெற்றுக்கொள்ள ஏதுவாக, "முன்பணம்" அனுப்பி வைக்கும்படி ஊக்கப்படுத்துவார்கள், இப்படியாக, போதிப்பவர்கள் தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் விரைவில் பெற்றுக்கொள்வார்கள் என்று வாக்களிப்பார்கள். இது தவறான மனப்பான்மையை ஏற்படுத்துவதோடு, வசனத்துக்கு புறம்பான போதனையாகவும் இருக்கிறது. 2 கொரி 9:8ல் தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்கேற்ப வேறு நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டும்; நம்முடைய சுகவாழ்வுக்காகவும் சந்தோஷத்திற்காகவும் அதைச் செலவிடக் கூடாடது.

* கொடுத்தலின் அளவு முக்கியமானதல்ல. "ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும்" **(2 கொரிந்தியர் 8:12).** இன்னொரு வார்த்தையில் சொன்னால், தேவன் ஒருவருடைய தர்மப் பணத்தின்

அளவு எவ்வளவு என்று பார்ப்பதில்லை. நம்முடைய தர்மப் பணத்தை நாம் ஏன் பிறரோடு ஒப்பிடக் கூடாது என்பதற்கு, இது நமக்கு விளக்கமளிக்கிறது. ஒருவருடைய திராணியின் அளவைப் பொறுத்து தேவன் தீர்ப்பு செய்கிறார். மேலும் அதைத் தீர்மானிக்க தேவனால் மட்டுமே கூடும்.

## கொடுத்தலின் விளைவுகள்

கொடுத்தலினால் உண்டாகும் தெளிவான விளைவுகளில் ஒன்று, சபையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. சபையின் பல வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடப்பிக்க, பல்வேறு விற்பனை முறைகளைச் செய்து பணத்தைச் சம்பாதிக்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ வேதாகமம் நமக்கு அதிகாரமளித்திருப்பதாகக் காணமுடியாது. அல்லது இன்றைக்குக் காணுகிறபடி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பொதுவாகக் காணும் அங்கத்தினரல்லாதவர்களிடம் காணிக்கையைக் கேட்டுப் பெறுவதும் சபையின் வேலையல்ல. சபையின் ஊழியம் அதின் அங்கத்தினர்களின் பிரயாசங்கள் மூலமாக மட்டுமே தாங்கப்பட வேண்டும்.

கொடுத்தல், நன்றி செலுத்துதலையும் தேவனுக்கு மகிமையளிப்பதையும் கொண்டு வருகிறது. நாம் தேவனுக்குச் செய்யும் ஊழியத்தை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம், அநேகர் நமது ஊழியத்திற்கான அடையாளத்தைக் கண்ணுற்று, தேவனுடைய கற்பனைக்கு நாம் கீழ்ப்படிகிறோம் என்று அறிந்து தேவனுக்கு மகிமையைச் செலுத்துகிறார்கள். **மத்தேயு 5:16 ல்** இதைக் குறித்து இயேசு பேசுகிறார். "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது," என்றார்.

கொடுத்தலினால், நாமும் சபையும் ஆவிக்குரிய வகையில் வளருகிறோம். நம்மால் கூடுமானவரை நாம் கொடுக்கும்போது, சபை தனது பணியைச் செய்ய நிதியை பெற்றுகொள்கிறது. இதினால் அநேக இடங்களில் உள்ள இழந்துபோன ஆத்துமாக்களை மனமாற்றம் செய்ய முடியும். ஒன்றுமே செயல்படாத சபையில், வெகு சிலரே அங்கமாக இருக்க விரும்புவர். சபைகள் ஊழியஞ் செய்வதையும், தேவன் மகிமைப்படுத்தப்படுவதையும் ஜனங்கள் காணும்போது, நற்காரியங்கள் நடக்கிற சபையில் ஜனங்கள் அங்கம் வகிக்க விரும்புவார்கள்.

பெயர் ................................................... பதிவு எண் ..............................

## பாடம் 1 – கேள்விகள்

1. உண்மையாய்த் தொழுது கொள்வதில் காணும் இரண்டு காரணிகள் யாவை ?

2. ஆவியோடு தொழுது கொள்ளுதல் என்றால் என்ன?

3. உண்மையோடு தொழுது கொள்ளுதல் என்றால் என்ன?

4. இந்தப் பாடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி, உண்மையோடு தொழுது கொள்ளுதலுக்கான மூன்று பகுதி யாவை?

5. ஏசாயா குறிப்பிட்டபடி தேவன் இஸ்ரவேலின் .................................................. ராயிருக்கிறார்.

## உண்மை / தவறு [சரியான பதிலை வட்டமிடவும்]

1. தொழுகையானது பிரதானமாக தேவனை நோக்கியதாக இருக்க வேண்டும்.
உண்மை/தவறு

2. தொழுகை என்பது வழிபடுதல், பயபக்தி அல்லது கனத்திற்குரிய பயம்.
உண்மை/தவறு

3. தொழுகை நமது வாழ்க்கையின் பிற செயல்களிலிருந்து முற்றிலும் அப்பாற்பட்டது. ஆகையால், ஒருவர் பாவ வாழ்வு வாழ்ந்தாலும் அவருடைய தொழுகையை தேவன் அங்கீகரிக்கிறார். உண்மை/தவறு

4. நமது வாழ்க்கையில் நாம் எதைச் செய்தாலும் அது தேவனைக் கனப்படுத்தவும் மகிமைப்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
உண்மை/தவறு

பெயர் ...................................................... பதிவு எண் ................................

## பாடம் 2 – கேள்விகள்

1. யூதர்கள் எந்த நாளில் தொழுகை செய்யும்படிக் கட்டளையிடப் பட்டார்கள்?

2. அந்த பழைய உடன்படிக்கை எப்பொழுது எடுபட்டு போயிற்று ?

3. இயேசு மரித்து எந்த நாளில் உயிர்த்தெழுந்தார் ?

4. இயேசு தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரமேறிச் செல்லுவதற்கு இடையில் (முன்பு), எந்த நாளில் தமது சீஷர்களுக்குத் தரிசனமானார்?

5. நமது தொழுகையில் 'போதிப்பதன்' பிரதானமான நோக்கம் என்ன ?

## உண்மை / தவறு (சரியான பதிலை வட்டமிடவும்)

1. பிதாக்களின் யுகத்தில், ஒவ்வொரு குடும்பமும் தங்கள் சொந்தக் காணிக்கையைக் கொண்டுவந்து தாங்களே தேவனுக்கு பலி செலுத்தினர். உண்மை / தவறு

2. ஆதி சபையில் (சபையின் ஆரம்பத்தில்), அவர்களெல்லாம் யூதர்களாக இருந்து வந்தபடியால், ஓய்வுநாளை தொழுகை நாளாகக் கொண்டிருந்தனர். உண்மை/தவறு

3. பெந்தெகோஸ்தே நாள் என்பது எப்போதும் வாரத்தின் முதல் நாளில்தான் வரும். உண்மை/தவறு

4. நமது தொழுகையில் நாம் முக்கியமானதாகக் கொண்டிருக்க வேண்டிய நோக்கம், சகலமும் பக்திவிருத்திக்கென செயல்படுத்த வேண்டும். உண்மை / தவறு

5. பிரசங்கம் செய்தல் சிறப்பாக பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டுமே, அதாவது உயர்ந்தவர்களாகக் கருதிக் கொள்ளும் "மேன்மக்களுக்கு" மட்டுமே வரையறுக்கப்பட்டது. உண்மை /தவறு

பெயர் ................................................ பதிவு எண் ..............................

## பாடம் 3 – கேள்விகள்

1. ஜெபம் என்றால் என்ன ?

2. இடைவிடாமல், ஜெபம் செய்வ தென்றால் என்ன பொருள் ?

3. நாம் யாரிடத்தில் நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும் ?

4. நமது ஜெபங்களிலே சேர்க்கப்பட வேண்டிய சில விஷயங்கள் யாவை?

5. ஆவியானவர் நமக்காக எப்படி வேண்டுதல் செய்கிறார் ?

## உண்மை / தவறு (சரியான பதிலை வட்டமிடவும்)

1. ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டும் வைக்கப்பட்டுள்ள ஒரு ஆசீர்வாதம். உண்மை/தவறு

2. ஒரு பிரசங்கியார் அல்லது பாதிரியாரின் ஜெபங்கள் விசேஷித்த வல்லமையையும் அர்த்தத்தையும் கொண்டது. உண்மை/தவறு

3. இன்றைய நாகரீக உலகில், பொது இடங்களில் யார் வேண்டுமானாலும் ஜெபம் செய்யலாம். உண்மை/தவறு

4. நமது ஜெபங்கள், நம்முடைய மத்தியஸ்தராகிய, இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கப்பட வேண்டும். உண்மை/தவறு

5. ஏழைகளுக்காக ஜெபித்த பிறகு, எந்த வகையிலாகிலும் தனிப்பட்ட வகையில் அவர்களுக்கு உதவி செய்ய முற்படுவது, தேவனில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும் ஜெபத்தின் வல்லமையும் குறைவுபடுத்துவதை விளக்கப்படுத்துகிறது. உண்மை/தவறு

பெயர் ...................................................... பதிவு எண் ..............................

## பாடம் 4 –கேள்விகள்

1. கர்த்தருடைய பந்தியைக் குறித்து நான்கு முக்கியமான கருத்துக்களைப் குறிப்பிடுக.

2. கர்த்தருடைய பந்தியில் வழங்கப்படும் இரண்டு பொருட்களைக் குறிப்பிடுக.

3. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் போது நமது மனதில் மையம் கொண்டிருக்க வேண்டியது என்ன ?

4. அப்பமும் திராட்ச ரசமும் நினைவுச் சின்னங்களாக விளக்கப்படுத்தும் நமக்கு எவைகளை நினைவுபடுத்த வேண்டும்.

5. ஆதி சபை யார் கர்த்தருடைய பந்தியில் எப்பொழுதெல்லாம் பங்கு பெற்றனர்?

## உண்மை / தவறு (சரியான பதிலை வட்டமிடவும்)

1. அப்பமும் திராட்ச ரசமும் ஆசீர்வதிக்கப்படும்போது, அவை உண்மையாக இயேசுவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறது. உண்மை/தவறு

2. யூதர்களின் பண்டிகைகளில் பரிட்சயமான இரண்டு பொருட்களை இயேசு எடுத்துக் கொண்டார் உண்மை/தவறு

3. ஒருவர் தன்னைத்தானே சோதித்தறிதல் என்றால், அவர் கடந்த வாரம் முழுவதும் எவ்வளவாய் பரிசுத்தமுள்ளவராயிருந்தார் என்று தீர்மானித்து பந்தியில் பங்கு பெறுவதைப் பற்றி முடிவு எடுப்பது ஆகும். உண்மை/தவறு

4. கர்த்தருடைய பந்தி கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டியதால், சபையின் மூப்பர்கள், விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் மட்டுமே கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். உண்மை/தவறு

5. அப்போஸ்தலர் 20:7ன்படி துரோவாவில் இருந்த சபை, பவுலின் பிரசங்கத்தை முக்கியமாகக் கேட்க வேண்டுமென வந்திருந்தார்கள். உண்மை/தவறு

பெயர் ........................................................ பதிவு எண் ..............................

## பாடம் 5 – கேள்விகள்

1. பாடுதலின் பிரதான நோக்கம் என்ன ?

2. பாடுதல் என்பது ஒரு ...................................... பலி.

3. இரண்டு வகையான கட்டளைகள் யாவை ?

4. நாம் நம்முடைய .................................. கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி.

5. மோசேயின் பிரமாணத்தின்படி கிறிஸ்து ஆசாரியனாக இருக்க முடியாது?

## உண்மை / தவறு (சரியான பதிலை வட்டமிடவும்)

1. சங்கீதம், கீர்த்தனை, ஞானப்பாட்டு ஆகியவற்றிற்கிடையே சிறு வித்தியாசங்களே உண்டு. உண்மை/தவறு

2. பாடலின் முக்கியத்துவம், அது அழகாகவும் உணர்வுகளைத் தூண்டுகிறதாயுமிருக்கிறது என்பதே! உண்மை/தவறு

3. சபையின் துவக்கத்திலிருந்தே, தொழுகையில் கருவி இசைக் கருவிலின் பயன்பாடு என்பது, அதிகமாக விவாதப் பொருளாக இருந்தது. உண்மை/தவறு

4. இசைக்கருவியைப் பயன்படுத்துவதை திருமறை ஒருபோதும் தடை செய்யாதபடியால், தேவன் அதின் பயன்பாட்டில் பிரியப்படுகிறார் என்று நமக்குத் தெரிகிறது. உண்மை/தவறு

5. பெரும்பாலான பிரிவுக்கூட்ட சபை ஸ்தாபகர்கள், இசைக்கருவி பயன்பாட்டை எதிர்த்துள்ளனர். உண்மை/தவறு

பெயர் ...................................................... பதிவு எண் ..............................

## பாடம் 6 – கேள்விகள்

1. தேவாலய காணிக்கை பெட்டியில் ஏழை விதவை அளித்த காணிக்கைப் பணம் எவ்வளவு ?

2. யூதர்கள் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டார்கள் ?

3. தன் மனதில்நியமித்தபடி ஒருவன் கொடுக்கக்கடவன் என்பதன் பொருள் என்ன ?

4. ...................... கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

5. கொடுத்தல் ...............யும், தேவனுக்கு ......................யும் கொண்டு வருகிறது.

## உண்மை / தவறு (சரியான பதிலை வட்டமிடவும்)

1. தேவனுக்கு தாராளமாய்க் கொடுத்தல், ஒருவர் தன்னுடைய ஆஸ்தியை விருத்தி செய்து கொள்ள ஒரு மாபெரும் வழியாகும். ஏனெனில், தாராளமாய்க் கொடுக்கிறவர்களை ஆசீர்வதிப்பதாக இயேசு வாக்களித்திருக்கிறார். உண்மை/தவறு

2. ஒருவர், தங்களுக்குள்ள "உபரிப் பணத்தில்" மட்டுமே கொஞ்சத்தை சபையின் ஊழியத்திற்கென்று கொடுக்கலாம். உண்மை/தவறு

3. கொடுத்தல் என்பது விசுவாசம், அன்பு மற்றும் தேவனுக்குச் செலுத்தும் வழிபாடு ஆகியவற்றின் பிரதான செயல்பாடு. உண்மை / தவறு

4. நாம் கொடுக்கிற வரைக்கும், நாம் ஏன் கொடுக்க வேண்டும் என்பது முக்கியமில்லை. உண்மை/தவறு

5. நாம் கொடுக்கும் தொகையின் அளவு, நம்முடைய தர்மப் பணம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பதை அறியும் ஒரு முக்கிய காரணி. உண்மை/தவறு